னிந்திரனுடனயனியம்புவானரோ. (கனள)

அந்தகன்வெருக்கொளாடகக்கட்டூயனை
யெந்தைநீயிருணியாயெழுந்துசெற்றெங்கள்
வெந்துயரொழித்தனைவேள்விகாயகா
தந்தனைபுனலிழுத்தரணியென்றனன். (கனஅ)

வாசமுமலரும்போன்மண்விண்ணேழ்கட
லாசையென்வடையரன்யானுமாகியென்
ஞசியின்வராகமாய்நண்ணிப்பொற்கண
நீசனைச்செற்றெமதிடனைநீக்கினை. (கனக)

அந்தமுமடிவுமாயாதியாய்த்தவர்
சிந்தனைக்ககப்படாத்தேவவெம்முனர்
வந்தனையெளியர்போன்மறைக்குமெட்டிலா
வெந்தைநின்மாயையையாவர்காண்குவார். (கஅ0)

படைத்திடயானெனப்பண்ணியாவையுந்
துடைத்திடவரனெனத்துலங்கவைத்தென்ற
னிடத்தினிலிருணியாயிவனைச்செற்றலாற்
கடைத்தொழின்முதற்றொழில்யாங்கள்கற்றிலோம். (கஅக)

உயிர்தொறுமுளனுமாயுலப்பிலண்டங்க
டயிரமைமெய்யெனச்சார்ந்துநின்றநீ
யியல்புடன்கொணர்ந்திடுமவனியென்றுமிவ்
வயமிசையொளிபெறவருளுவாயென்றான். (கஅஉ)

அபனிவையறைந்திடக்கேழல்ஙிய
புயல்புனன்மீதினிப்பூமிகீழ்விழா
நியல்புடனிருக்கவாண்டருளவெண்கணன்
றுயரொழிந்தாடவேசுரர்கள்போற்றினர். (கஅங)

பூமடுணடமரர்கள்போற்றுங்வேலையிற்
சாமளரூபியாய்த்தமனியத்துகில்
வாம்மேகலையுடன்வயங்கப்பார்மகள்
வீமனுஞ்சுரிகுழல்விளங்கவந்தனள். (கஅச)

அடிமினைசநூபுரமரற்றப்போற்றுசீர்த்
துடியினடமேகலைதுலங்கிடித்தில
வடகிலிலகப்பொன்வளைக்கைமாண்புற
விடமகல்விழியிணைமினிரவந்தனள் (கஅஞ)

சுதைதருமொழியினடுவர்செவ்வாயள்வின்
னுதலிபொற்குமிழெனநுவலுநாசியள்
புதிதலர்கமலம்போற்பொலியுமானனி
மதியினிற்பிள்வெனவயங்குநெற்றியாள். அசு)

ஈகெணுங்கழுத்திளாளீகநேனை
வேகடத்தோடுகள்விளங்குகாதிணள்
கேகயமனங்குயில்கிள்ளைகாணவே
சூகரத்தடிமிசைதொழுதுநின்றனள். (கஅள)

வந்தடிதொழுதெழுமாதைக்கோலமாஞ்
சுந்தரவாமவூருவிற்றுலங்கசற்
சந்துடன்முமுந்தனத்தின்மீதணிந்
திந்திரைகாணவான்டிலங்கவைத்தனன். (கஅஷ)

அவனிமின்வராகமாமாதிபூருவிற்
கவினுறத்தோன்றலுங்கமலன்றேவர்மன்
சிவனெடுமுனிவர்கடிரண்டுவாழ்த்தியே
பவமறப்பொழிந்தனர்தருவின்பன்மலர். (கஅஙு)

துந்துமிபடவிகைதுடிகள்காகளஞ்
சிந்துவிணெவிகெடமுழக்கச்சேரவொன்
கந்தரற்றூபமுங்கவின்கொடூபமு
மந்தரத்தரம்பையுமொடித்தங்காடவே. (கஅ0)

கோலமணிடத்துடையிருத்துங்கோமள
ரூலமின்னினையணைத்துவந்துரான்மறை
வேலபிற்றிரண்டிடுமிரதமீண்டிய
சீலமாவராகமாபுராணஞ்செப்பினன். (கஅக)

பாலமற்றுயர்மகாபுராணந்தான்பக்கர்ந்
தோவியத்தெழிலினேப்படைத்தவுத்தமத்
தேவியைமகிழ்வொடுசேரத்தன்பதத்
தேவிடையவனையன்போற்றச்சேர்ந்தனன். (ககஉ)

கோலமாயவனியைக்கொணர்ந்துபொற்கணன்
காலன்வாயுறவரன்கமலனேத்தமா
ஞாலமான்மகிழ்கதைதவின்றுநாதனூர்
சீலமீதெனமுனிதிருவுக்கோதினன். (ககங)

வராகப்படலம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - அகங.

---

## கூ. வது—கபிலப்படலம்.

வாமமவிர்சித்திரைவைகாசியானிசயமாற்றீகெண்ணைக்காடியாவணிக்
குணின்றுகஞ்சத், திமையன்மண்விழப்புரட்டாசிடற்பசிபாலன்சிரந்துணி
யவேவாழினையவிடநற்றேவன், சோமகுலவந்தகன்செய்முனர்நடுங்காத்திகை
த்தாடுசிடைமாளாதருளுந்துளபமார்சழியான், பூமன்வனிதைக்காய்மாசில்
சாபங்குனியப்போரினிற்றெசமுகனைச்செற்றனைப்போற்றிசெய்வாம். (க)

வே று. அரிபெருங்கிரியாகியேயாடகயனன்
சிரமறுத்திடுசரிதையைச்செங்கமலத்தின்
மருவுநற்றிருக்கேட்டுளமகிழ்ந்துமால்பினரின்
றனாயியற்றியதெதுவெனாரதன்சாற்றும். உ)

விரியுகான்மறையயனெடுமுதவியவிமலன்
கருடவாகனனுய்க்கருத்தமன்முனைாய்தி
வரமளித்தவன்சுதனைனக்கபிலனுப்வயங்குஞ்
சரிதையுத்தமிகேளெனத்தவனிவையறைவான் ங)

திருத்தமுற்றிடச்சிருட்டிசெய்மலரயன்சேயாங்
கருத்தமப்பிரசாபதிகருடவாகனனு
மொருத்தனுக்குரித்தாயவெட்டெழுத்தைத்தனுளத்தி
னிருத்தியோகமாண்டியற்றினனெண்ணருங்காலம். (ச)

இருதையத்தினிலெட்டெழுத்தழுந்துறவிருத்தி
விரதசீலனுய்விலோசனாசியினுதியின்
மருவவைம்பொறிமறித்துத்தன்னடியினங்குட்டந்
தனாயினுற்றிடத்தழலினுப்பண்டவஞ்செய்தான். (ஞ)

கருத்தினுள்கவுமரியதாங்கடுந்தவஞ்செய்யப்
பிருத்தியன்கருத்தமன்றன்மேற்பிரியுற்றவனுய்
திருத்தம்வானவர்செயக்கையினேயுங்கோடுந்
தரித்துவந்தனன்கலுழன்மேற்றிருவுளந்தயங்க. (சு)

அலரிகாணவேயலராரவிந்தமாமல்கண்
மலியுமைப்புயன்மிசையிளங்கதிரவிர்வயங்கும்
பொலனுறத்திகழ்கிரீடநற்சேகரம்பொருந்தக்
கலந்நிறைந்திடக்கண்கைவாயுந்திகாலிலக. (எ)

மகரகுண்டலமலர்ந்திடவளையிருதனுபோற்
புகல்வதற்கரிதாகியபுருவங்கடயங்க
நிகரிலாக்கவுத்துவமணியவிர்நிறைந்திடப்பொற்
றுகின்மருங்கினிலமருடைநாணெழுந்துலங்க. (அ)

இரவினன்னவிர்பரந்திடுங்கருங்கடலெனவெண்
டரளமாலைகள்கழுத்தினுமுரத்தினுந்தயங்க
விளைசெய்தார்துளபத்தொடுவிளங்குகஸ்தூரி
திருமுகத்தினுக்கழகுறநுதலிடைத்திகழ. (கூ)

தேவதுந்துமிமுழங்கிடச்சிறந்தகற்பகப்பூத்
தூவிவானவர்நடித்திடமுனிவர்கடிதிப்பப்
பூவுளோரெடும்புகரிபவிறைபுகழ்ந்தேத்த
நாவிணன்மறைநவின்றிடநாரணன்வந்தான். (கo)

வாடிரும்மலர்மங்கைதன்னுயகன்வரவு
மாடிணன்வருமானந்தயனநீர்சொரியப்
பாடிணன்மறையிசையினிற்கருத்தமன்பணிந்தே
சூடிணன்பகிரதியமர்பதத்தணிதுளபம். (கக)

இரவிகாணலராரவிந்தமலரெனவிணையி
லரியைநோக்கியகருத்தமனுனனம்வயங்கச்
சரிரரோமமும்பொடிப்பநாக்குழறிடத்தடக்கை
சிரமுறக்குவித்தாடியேசெப்பலுற்றனனால். (கஉ)

அண்டமெண்ணிலவகுத்தவைகாத்தளித்ததனு
ளுண்டெனத்திரிந்துரோமத்தினுதியதிலுலப்பின்
முண்டகக்கடவுளருறைமுட்டைகளமர
வெண்டவத்தினர்துதித்திடவிலங்கிவீற்றிருப்பாய். (கங)

சிவகோடிகளனைத்தினுமுறைந்தவைசெலுத்தும்
பாவபுண்ணியம்பற்றிலாய்பங்கயன்முதலாந்
தேவர்தேடவுந்தெரிகிலாய்பத்தருக்கெளியாய்
பூவினின்னமர்திருவுரம்பொருந்தியபுனிதா. (கச)

மாதவாகமமலர்மகண்மகுணனேகமவே
ஆதியேகமவவனிமின்னுயகமவே
சோதியேகமசுந்தரப்பகீரதிதோய்ம்
பாதனேகமபரமனேகமவெனப்பணிந்கான். (கஞ)

உளமுமென்பிணேடிருகிடுங்கருத்தமன்றன்னைத்
துளவணிந்திடுசோதிதன்னிருகணுணேக்கி
யளிமலிந்திடமகிழ்ச்சியாலானந்தமுறவே
வளமுறும்மிளமுறுவல்வாய்மலர்ந்திவையறைவான். (கசு)

சுத்தனுமெனைக்கருத்திடைத்துலங்கிடவமைத்த
பத்தனுகியகருத்தமபவமெலாமறுத்தே
மெய்த்தவஞ்செயும்வித்தகாவுனக்கியான்விளங்கும்
புத்திரன்னெனவருவனென்றிவையிவைபுகல்வான். (கள)

சுத்தஞ்சியசுவாயம்புமனுவருடோகை
தத்தைதாணுறச்சாற்றிடுத்தேவசூதையைத்தான்
வித்தகம்முறவேட்டவடன்றெடும்விளங்குஞ்
சித்தசன்னெனக்கலவியிற்சிறந்தினிதிருப்பாய். (உஎ)

தேவகூதையாய்த்தேவியைநீபுணர்ந்திடவே
தூவியோதிமநிகர்ஈவனிதையர்துலங்கப்
பாவமில்லவள்பயந்தபின்பவவிருளகற்றும்
தீபமாகியசிறுவனுய்ச்சனிப்பனென்றகன்றான். (கஙு)

மாயனேகியபின்னரின்மலர்மகணிகராந்
தூயளாகியமகளுடன்சுவாயம்பூமனுமன்
காயும்வெவ்வினைகடிந்தருள்கருத்தமன்றன்னை
வீயொடேயயர்தனிலருச்சித்திவைவிளம்பும். (உ0)

மாதவஞ்செயுங்கருத்தமயான்பெறுமகடான்
கோதில்கோகனகத்திருநிகர்த்திடுங்கொம்பு
பூதலந்தனில்விசும்பினிலிணையிலள்பொறைசா
னீதிவாய்மையளிவளெனச்சுட்டிநின்றறைவான். (உக)

உருவிலுலுருவிலிமடலெடுத்துறுவிரகம்
பெருகவேமயங்கிடவயங்கிடுதலன்பெற்ற
தெரிவையாகியதேவகூதைத்திருத்தன்னை
தருகுவனுனக்கென்றுகைத்தாணீரளித்தான். (உஉ)

கதமிலாதுயர்சுவாயம்பூமனுமன்கன்னிகையைச்
சதுமறைப்பொருளுணர்ந்திடுகருத்தமன்றனக்கே
வுதவினேனெனவுதகங்கைவிடுதலுமுவந்து
சுதைநிகர்த்திடுந்தோகையைநெறி யின்வேட்டனலால். (உங)

இந்துவேணியைநிகர்த்திடுங்கருத்தமனில்லாள்
விந்துமாசரசிற்படிந்தெழுவவண்விதிக்க
வந்தமின்னுடனத்தயத் தனேகமங்கையர்கள்
வந்துதோன்றலுமினவிக்கூழியஞ்செயவழுத்தான். (உசு)

கருத்தமப்பிரசாபதிகாகமுமணியு
மருத்தியாகவேபொருத்தியவிமானமங்கெழுத்தான்
றிருத்தமாகவேவகுத்ததிற்றேவகூதையினை
யிருத்திமற்றவளோடுமெண்டிசையெலாந்திரிந்தான். (உரு)

கற்பகத்தருநிழலினுங்கவினுறுகுபேரன்
பொற்புறுந்திருநகரமாம்பொழிலினுங்கனக
வெற்பினுற்றுயர்ந்தனவனத்தினுமேவி
யற்புதத்தணங்கின்குயமுராத்துறவகீனத்தான். (உசு)

மாரனேடவன்மனைவியும்வெள்கிடமறுவி
ஞரிதன்னெடுங்கருத்தமனலங்கிளர்கலவி
வாரிமூழ்கிடமற்றவள்வயிற்றிடைச்சனித்தா
ராருகேரிலாவாரிவையனைந்துடனுல்வர். (உஎ)

பாவைமார்வப்பெயர்கீளப்பயந்தழகாருங்
தேவகூதையாந்தெரிவைசாடரத்தினிற்சிறந்த
மூவராகியமுழுமுதன்முனிவர்கள்வலாரி
பூவின்மீதமர்புரிதலும்போற்றிடவமர்ந்தான். (உஅ)

உவமையற்றுயர்தேவகூதைத்திருவுதரத்
தவிர்நிறைந்திடுமச்சுதனமர்ந்திடுநாளி
னவையகற்றியகருத்தமனுரியைநோக்கித்
தவமியற்றிடுவேன்றளரோலெனச்சாற்றும். (உக)

மனைவிபுத்திரர்மித்திரர்வாழ்வினையெல்லாங்
கனவினுற்றிடுபொருளெனக்கடிதினிற்கெடுமா
றினகரன்புருடாயுவுநிறைந்திடத்திரிவ
னனகனேயலாற்சீவனுக்காந்துணையிலையால். (ஙo)

ஆதலாலினிதாயபோலடர்மனைவாழ்க்கை
கோதில்கோதையேகூறினநித்தியமாகு
மாதவன்றிருநாமமேமறுவிலாநெறியைத்
தீதகற்றியவவன்பதத்துறச்செலக்காட்டும். (ஙக)

காமமாகியவளக்கைக்கடக்கிலாதமிழின்
றீமையாகியசனனத்தைச்சேர்த்திடுமதலால்
வாமமேகலைமடந்தைநீவருந்தலையென்று
பூமனன்சுதன்றவஞ்செயப்போவனென்றுரைத்தான். (ஙஉ)

கொழுனனிவ்வுரைகூறியேயகல்வனென்றறைய
வழுதகண்ணினளயர்ந்தவனடியின்வீழ்ந்தெழுந்தே
தொழுதகையினடிணைவநீயொருவிடற்றுண்ட
மெழுமனத்தியாமெனக்கியார்கதிகனென்றிசைத்தாள். (ஙஎ)

மனவியிவ்வுணாயியம்பியேவருந்திடக்கடிய
கினையெவென்றிடுங்கருத்தமன்விளம்புவான்மாலுன்
றனையணுகவேசனிகவுன்சாட்சாத்தமைந்தான்
வணிதையேயுனக்கவன்கதிவழங்குவனென்முன். (நச)

சரியின்மாதவன்றனையுச்சனிப்பனென்றியம்பி
யரிவைதன்னிருகயணீரங்கையான்மாற்றிக்
கரியுறுங்கருங்கானிடைக்கருத்தமனேகப்
பிரமனெய்தியேதுதித்திவைபேசலுற்றனனுல். (நஞ)

திருவிணதனுன்றேவிதன்னுதரத்தினமர்ந்தான்
சரியின்மாதவவுனக்கவன்கதியினைத்தருவ
னரிவைவெந்துயராறவேயவன்சனித்ததற்பின்
மருவுவாய்வனத்தென்றகன்றனன்மலருறைவான். (நசு)

பிரமனவ்வுரைபேசியேயகன்றிடத்தவஞ்செய்
கருமகீங்கியகருத்தமனிலகுகன்னியரை
மரிசியேமுதலானவப்பெயர்கையின்வழங்கிச்
சுரர்துதித்திடத்துலங்கினன்மனவிதன்னுடனே. (நஎ)

சுரர்கண்மாமலர்பொழிந்திடத்துந்துமிமுழங்கக்
கரியையூருவோனரன்கமலன்புகழ்ந்தேத்தத்
தெரிவையாகியதேவகூத்தத்திருவுதரத்
தரியுருபமாங்கபிலன்வந்தவதரித்தனனுல். (நஅ)

பாவகாரியர்பற்றறக்கபிலனேப்பயந்த
தேவகூதையுஞ்சிறந்திடுகருத்தமன்முனு
மாவலிற்பெறுஞ்சிறுவனேயரியெனவறிந்தே
பூவின்மாரிகள்பொழிந்துடபணிந்துபோற்றினரால். (நக)

மைந்தனுகியகபிலனைக்கருத்தமன்வணங்கி
யிந்தமாநிலத்திருவைப்போலியற்றிடுங்காமப்
புந்திமுற்றியபுன்மைபோயுன்பதம்புகவே
யெந்தமாதவமியற்றுவனியம்பெனவிசைத்தான். (சூ0)

தந்தையாகியகருத்தமன்சாற்றிடக்கபில
னெந்தமாதவமியற்றினுமென்பெயரறியா
மைந்தர்மண்ணிடைப்பிறவியின்மறுகுவரதனுற்
சிந்தையின்னெனமறக்கலாத்தவஞ்செயென்றுரைத்தான் (சக)

சிறுவனுகியகபிலனுமிறையிவைசெப்ப
வறிஞனுகியகருத்தமனடவியின்டைந்ததும்
பொறியைவென்றுநற்புந்தியிற்றுவாதசாக்கரத்தா
னிறையுறுத்தவஞ்செய்தரிகிர்பசுத்துற்றான். (சஉ)

மதுணைஞப்பிரிக்தழுங்கியசுவாயம்பூமகடா
னிகரிலாததன்சிறுவனைவணங்கியேதெறியார்
புகரிபுத்திடர்போக்கியபுனிதனேயென்ற
னகமட்டூர்க்கும்வெவ்வினையறவருளெனவறைவான். (சஉ)

என்பத்துறுமடியவர்கயவரையிகழ்வர்
துன்பமூற்றியமனைவியர்சுகத்தினைத்துறப்பர்
வன்பகற்றியங்யவரோடிணங்குவர்வலாரி
யின்பமூற்றியபோகமுமென்றுகச்சிலரால். (சச)

சிரசிலைனையிறைஞ்சியாராதனஞ்செய்வ
ரிசரித்திரமாயவென்காதையையறிந்தே
யுரைசெய்தப்பொருளுணர்ந்துளமகிழ்வொன்னடியார்
திரளின்மற்றவர்பாதகீர்சென்னியிற்றரிப்பார். (சரு)

சுத்தனுகியபத்தருக்குறுகுருதினைவ
னத்தனன்னைமித்திரன்சுதன்சகோதரனுகி
யித்தலந்தனிற்பவக்கடல்கடக்கவிட்டிலங்கு
முத்தமப்பெயருறையுமென்பதத்திலுய்த்திடுவன். (சசு)

விரைவிற்றற்றமூற்றிடுகட்டந்தாழ்த்தரைமேவு
மருவுநீரினைவிலக்கியேயுயர்நிலமதனிற்
பரவுந்தனவநத்தினிற்பாய்ந்திடவியற்றும்
விரகர்போலவும்விட்டெனையுறுவனென்னடியார். (சஎ)

ஆதனந்தனினிருந்தடர்வாயுவையடக்கிச்
சூதுசெய்யுபிந்திரியங்கடோற்றிடலொடுக்கி
நீதிமல்கராசியினுதிரயனத்தைநிறுவிக்
காதலாலெனையிருதையகமலத்திற்காண்பர். (சஏ)

இருதையந்தனிற்கமலமாமலர்மிசையிலங்கு
முருவனுகியவெனைத்தியானஞ்செயுமுபாயஞ்
சரியில்வாலணைச்சவுந்தரியத்தூடனின்றே
யரவினிற்றுயின்றிருந்தபோற்காண்குவதறிவே. (சஐ)

கொடிதுரொட்டிசெந்தாமரையலர்மலர்குலிசம்
படருந்குறியழகுறவிலங்கியபாதஞ்
சுடர்மலிந்திடுசோமரிற்றுலங்கியநகங்கள்
வடிவுடைத்திருவயங்கியதரமுறுசானு. (ஙo)

உவணன்றோள்களுக்கழகெலாமளித்திடுமுருவங்
கவின்மலிந்திடுகனகநற்கலிங்கமார்மருங்கு
நவையகற்றியபிரமனுற்பவித்திடுநாபி
யுவமையற்றுயர்திருவினுறைவக்குமில்லிடமே. (ஙக)

# கபிலப்படலம்.

கவின்கவுத்துவமணியினுக்களித்திடுகண்ட
முவமையற்றுயர்மந்தரவரையுறக்கடையத்
தவர்மகிழ்ந்திடத்தலங்கியகடையமார்தடக்கை
யவிர்கொடுத்திடுகரங்களினமருமைம்படைகள்.

அளிசிறந்திடுங்குஞ்சிநல்லளிசெறிநயனம்
வளைவின்மானவேல்வயங்கியபுருவங்கள்வெள்ளை
யிளவிளங்கதிரிரண்டுகொண்டெனவிருகுழைக
டளவலர்ந்தசெந்தாமரைநிகர்த்திடுவதனம்.

இவையெலாமுறவிளங்கியவுருவமாரிறையை
யவிர்நிறைந்திடவிருதயகமலத்தினலர்மே
னவையகன்றிடஞானசந்தாவிளக்கெடுத்தே
தவமலிந்திடச்சபீசயோகத்திறற்காண்பர்.

இருதயத்துறுமலரமர்யானேனுமிறையை
மருவுவோருளமுருகுவர்மகிழுவரழுவர்
சிரமிசைக்கரஞ்சேர்ப்பர்மெய்யுரோமங்கள்பொடிப்ப
விருகணைனந்தநீர்விழுவெங்கணுநடிப்பர்.

பேயர்போலவேதம்மெயைப்பேணலர்நகுவர்
தூயபத்தரைக்கண்டினிருகையாற்றொழுவ
ராயவன்புறுமடியர்களென்பதமதனிற்
றேயம்விஞ்சியவிரசையைக்கடந்துசூழுவரால்

தாமதன்பரதிரவியம்பிறர்தையல்புணர்ச்சி
தீமையெல்லவுமவிந்திடச்செய்குவனுலப்பில்
காமமுற்றுவனிராசதன்சாத்திகன்கமல
மாமனுகுமெனுமந்தன்மந்திடையமைப்பன்.

அலரியாலுலர்காட்டத்தினதிகமாங்கிளையோ
டிலையுறும்மரமதனினுமுயரியதெண்ணில்
பிலனையுற்றிடுபிராணவாயுத்தருக்கிருமிச்
சலமுளாழ்மனக்கிடமற்றதிற்சற்றுப்பெரிய.

அறிவுண்டாமனக்கிருமியினதிகமாம்பரிச
மூறவுணர்ந்திடுமரவட்டையதனினுமுயரு
நிறையுநற்சுவைவலசலசரமதினிவரு
நறுமலர்ப்பரிமளத்தினநுகர்வரல்லளியே.

அளியைவிஞ்சிடுமோசைகண்ணுளுணரவந்
தெளிபவாயிருபக்கமுந்தசனங்கள்செறியும்
வெளிறில்சட்செவிக்குயர்ந்திடுமதற்குவீறிடுமாற்
கிளருநாலுகாலுளகரிகேசரிபலவும்.

அடிசதுர்த்தியாம்விலங்கினுக்கதிகமானிடர்கள்
படியின்விஞ்சியமனிதரினுயர்ந்தவர்பவங்கள்

கடியுமவ்வேதியரவரிணுநிவர்ந்தவர்கருத்தி
னெடியமாமறைநான்கையுங்கழ்த்துமர்த்தணோ. (கூ0)

மறையையோதுவார்தம்மினும்வயங்குவார்வேத
மறையுமப்பொருளுணர்ந்தவரவரினும்பெரியோர்
நெறியினப்பொருட்சந்தயமறுங்கழ்த்திடுவோர்
மறுவினித்தியனியமமுற்றவரினுமுயர்ந்தோர். (கூக)

நீதியாமனுட்டாநங்கணிறைந்தவர்தமினும்
வாதைபோகவேகாமம்வையாநியமத்தோ
நேதமற்றிடமவரினுநியமங்களெல்லா
மாதியாமெனக்கேசமர்ப்பித்தவரதிகர். (கூஉ)

நீதியாமனுட்டானங்கணிகழ்ததுமப்பலன்கள்
வேதவேள்வியினுறுபொருள்விழுமியதான
மீதுதான்முதலானவையென்னிடத்தளிக்குஞ்
சாதுவிற்பெரியோரிஃசகலலோகத்தும். (கூங)

சகலதேவதைதமக்கியான்றலிவன்சத்தியமே
நிகரில்சாகரங்களைகடவாததுநிவருங்
ககனமேகங்கள்சொரிவதுங்கடல்வடவைத்தீ
வெகுவிலாததுமென்னுடைவிரைதவாக்கினேயே. (கூச)

கலர்கடம்முயிர்கடுஞ்சமன்கவர்வனென்றெண்ணர்
நிலனிலெண்ணிலாவருடங்களிருப்பர்போனினைந்தே
வலனிற்முந்தருங்கலன்களுமாழையுமெல்லா
நலனின்மன்னராற்றிருடாராஞசமாய்மெலிவார். (கூரு)

ஈனலுயினும்யாக்கையையிழக்கச்சம்மதியான்
கானலாறெனக்கருதியேயுழலுவார்போல
மானநோக்கலான்வளைவிலாமகளிர்தோளணைந்தே
யானியேதரும்பவமுறவாசையைத்தவிரான். (கூசு)

பரதனங்களைக்கவர்ந்ததுபாவமென்றெண்ணு
னிரதம்போலவெந்துரிதமேகிறைக்குமில்வாழ்க்கை
மருவமற்றதிறற்றினசையெங்கணும்வருந்தி
நனைமலிந்திடுமூப்புநோய்நணுகவேமெலிவன். (கூஎ)

தினையுந்தோலவித்திடவளைவில்லெனத்திகழ்வ
னுருவமாறியேயுடல்குனிந்திடயனங்க
டொகிலாதுபற்பலகழன்றிடத்தெரிவையர்க
ளருவருபுறவகன்றிடச்சிறுவர்குறுகிப்பர். (கூஅ)

சிறுவரோடிலானிகழினுஞ்சினேகமற்றவர்மே
னிறையவைத்தவருதாசனக்கூழ்நிறைத்திடினு
மறுவுறுஞ்சுவாத்தின்பபோலருந்தியெவருந்தி
நெறியறத்தவழ்ந்தப்பொழுதயிர்விடுமினப்பன். (கூக)

மனவிபுத்திரர்மித்திரர்வாய்திறந்தாற்ற
றினவுமற்றவர்க்குரைகிகழ்த்தவுமரிதாய
வினைகள்சுற்றிடக்கோரசாதகருறவெருவி
மனநடுக்குறப்பிரசமாமலம்விடமரிப்பன். (எ0)

இருநிலத்திடைமரித்தவன்சூக்குமயாக்கை
விரவியாதனுசரீரத்தின்மேவிடவமைத்துப்
பரவுசாதகர்திருடரைப்பற்றுமாறெனவே
கரமிரண்டிறப்பாசத்தாற்கட்டியேகுவரால். (எக)

நெறியின்ஞாளிகணிறைந்துமெய்யெங்கணுங்கவ்வ
வறையுங்காலுடன்காட்டித்தியாண்டுவந்தடர்க்க
நிறையும்வெம்பசிகலிந்திடநீர்நிழனிலாது
மறுகுசாதகர்கசையடிவெரினுறமயங்கும். (எஉ)

தாயியற்றியபவமெலாநினைந்துளந்தளர்வ
னெரிபரப்பியவயமுறுமில்லக்கயோசனையும்
பரவுசாதகரடியிறைப்பயந்தழுதரற்றித்
தருமன்முன்னரிறுறுகாழிகைதனிற்சார்வன். (எங)

கடுவன்வெங்கதமுறுகவின்றிடுமொழிப்படியே
கொடியசாதகர்கொள்ளியாற்குரம்பைவெந்தரற்றச்
சுடுவர்கால்கரந்துண்டமாய்கறுக்குவரவன்றன்
குடர்பிடுங்கிடக்குரைத்தடர்ஞாளியைவிடுப்பர். (எச)

அகிகடித்திடவிரிச்சிகம்புச்சமிட்டறைய
வகிர்படுத்தவன்றசையினைவாளிலுலர்த்து
மிகவரற்றுவான்வாயினிற்றினித்துவெங்கதமார்
புகரிபக்குரமிதித்திடப்புடைத்திழுத்தெறிவர். (எரு)

வனையிலுச்சியினேற்றியேமண்ணினூக்குவர்க
ளினையுகீரினுளமிழ்த்துவர்வசியினேற்றிடுவ
ரரிவர்மெய்யினைச்செக்கினிட்டாட்டியேயரைப்ப
ரொருபரந்திடுமழுவினைத்தழுவிடவடிப்பர். (எசு)

அதிகபாவங்களியற்றிணைவனியினந்த
மிதமுறும்பசாதிர்ப்பந்தமேவியேபினருங்
கதமுறுங்கடுஞ்சாதகர்கரத்திழுப்புண்டே
யதன்மமேதுணையாகவெங்நியத்திழுப்வர். (எஎ)

நிவுரவம்மூதலாகியநினையமேழ்மூன்றும்
பவமுறுந்துணையாகவேபடிந்ததுதுலித்து
நவையுறும்மவன்செய்தகன்மங்கணண்ணிடவே
யவனியிற்பலயோனியின்வந்தவதரிக்கும். (எஅ)

புருடர்வாயினிற்சீவனீரனந்தனிற்புகுந்தே
யரிவையோனியின்மகிழ்ச்சியாலவன்புணர்ந்திடவே
பரவுசுக்கிலஞ்சோணிதத்துற்றிடப்பாய்ந்தே
யொருதினத்திலெண்ருகியேயுதரத்திலுறுமால் (எக)

ஐந்துராவிலயத்திலுருகுமிழிபோலாகிச்
சந்தமாகியதசையதாய்த்தசதினத்திருண்டே
யந்தமாகியோர்திங்களிற்சிரங்கைகாலாகி
யுந்திமெய்செறியுரோமமுத்திங்களிலுறுமால். (அ0)

அத்திதோறசையரிவையாண்குறியுறவமரும்
மூத்திரத்துடன்முப்பதுமாறுநாடன்னின்
சத்ததாதுக்கள்சதுர்த்தியாந்திங்களிற்சாரும்
பத்தினைந்துபோந்திங்களினுறும்பசிதாகம். (அக)

அன்னைதானுகரன்னசாரம்மவள்குடரின்
மன்னுகாபியின்கொடிநெறிசுவயிற்றிழித்து
துன்னுமாப்பையிலுறுமாதத்தினிற்சூழுங்
கன்மசென்மமேழ்திங்களிற்கருத்துறவறியும். (அஉ)

அலரியான்வருமட்டமாதந்தனிலுதர
மலமுடன்பிரசரத்தினுண்மாழ்கியேகிருமி
பலவும்வாய்கொடுகடித்திடப்பதைத்துமூர்ச்சிக்கும்
தலையினைக்கவிழ்ந்தேவெளின்கூனுறச்சாரும். (அங)

சரியிலன்னைவாய்தனினருந்திடவயிற்றுரு
மருசியுப்பினிற்சாரங்கள்வனைத்திடக்கரித்துத்
தெருமரல்லுறுங்கழிந்திடுஞ்சனனத்தினிலை
வரமெலிந்திடுமுடலெலாநடுங்கவேமயங்கும். (அச)

மாதமொன்பதின்வருந்தியேயனேகசன்மத்தின்
மீதுறும்பலமனைத்தையுந்தெரிந்துடன்மெலிந்து
சூதிவாயுவந்தறைந்திடத்துளங்கியேநெளியு
மாதிகாரணமவெனவங்ககூப்பிடுமால் (அரு)

இருநிலந்தனிலெண்ணருஞ்சனனத்தினிலைழக்க
வருபவங்கடான்மாய்ந்திடமாதவன்றன்னைப்
பிரமைசேருமுன்பேணியாராதனைசெய்து
நினையவேலையைநீந்துவனியானெனநினைக்கும். (அசு)

ஐயிரண்டுதிங்களுநிறைந்தன்னைதன்னுதரப்
பைகிழிந்திடச்சூதியாம்பவனன்வந்தெழுந்தே
மெய்யொடானனங்கீழதாய்வீழ்ந்திடநூக்கக்
கைகுவித்தரிகருத்துறச்சனிக்கும்வேலையின்வாய். (அஎ)

அன்னையோனியினனந்தோன்றுவேலியின்வாய்
மன்னுமாணையாகியசடவாயுவந்தறையத்
துன்னுஞானமும்பறிபடச்சோதியைமறந்தே
யிந்நிலந்தனிலடுத்தடுத்திறங்கியேசனிக்கும். (அக)

விட்டையுற்றிடுகிருமிபோல்விபுலியினெளிந்தே
யிட்டமேயறியாதுதாய்வளர்த்திடவிரங்கித்
துட்டசெந்துமெய்கடிக்கவுந்துடைக்கவுமறியான்
கட்டமோடுதூக்கந்தமாம்படுக்கையிற்கிடப்பன். (கo)

தாயினன்னைகைதனினமர்ந்திருந்துறத்தவழ
மருவியேநடைபயின்றபின்மழலைச்சொற்கூறிப்
பருவமைந்துறப்படியினினைய்துதற்கரிய
பொருளோநற்றியேபொலனுருமுருவனுய்வளர்வன். (கக)

கதமுமாசையுநிந்தையுங்கயவர்களைறைசொ
லிதமதாகவாங்காரமோடிவையெலாம்வளரப்
பதகனுகவேயியற்றிடும்பவமெலாமகற்றிச்
சதுமுகன்றனைத்தருமெனைச்சார்வதுகருமம். (கஉ)

அயனுந்தான்றரவெழுந்திடுமரிவைதன்மீதின்
மயலெழுந்தனன்மற்றவன்சிருட்டியினமருங்
கயவனெங்ஙனம்விடுகுவர்கடியதீவினையின்
செயலதன்மனைச்சேருதன்மடந்தையர்கலவி. (கஙு)

ஆதலாலனைபுத்திரற்கேதுவாயமர்ந்த
மாதராரனைவிரும்பியுமாத்திரமாகப்
பூதலந்தனிற்புன்மையர்சங்கமதகற்றிச்
சோதியாமெனைத்துணையெனப்பற்றுவதறிவே. (கச)

தாயினிற்செயுந்தருமபாவங்களிலுலே
விரகினெய்யுநாடாவுழன்மெல்லியவினைழபோ
லிரவிகாதலனகரினுயிவ்வுலகத்துந்
திரிவொண்ணிலயோனிகடன்னிடைச்செனித்தே. (கஞ)

கிரகநீதியாங்கிரமஞ்செய்தறம்பொருள்காமம்
விரகின்முற்றுறத்தேவதைபிதுர்க்களைவிரும்பி
நிகரிலாவெனைநினைக்கிலானவாந்திரவயந்தான்
புகவழிந்திடுமிந்துவினுலகத்திற்போவன். (சுக)

சரியிலாதலசாத்திகர்சங்கமுமேவி
விரியுநான்மறைமெய்ப்பொருளுணர்ந்துளம்விளக்கிப்
பரமனுமெனையருச்சிப்பர்பருதிமண்டலத்தை
யுருவியேயபனுலகமாந்தென்பதத்துறுவர். (கஎ)

ஆதலாலெனைப்பயந்திடுமன்னையானவளே
தீதையாவையுமொருவிமெய்ஞ்ஞானமுட்டெளியச்
சோதியாமெனைத்துலங்குமுன்னிதையத்தினிறுவி
மாதவஞ்செய்துவருதியென்பதத்தெனவறைந்தான். (கஎ)

மைத்தகுகியகபிலமாயவனருள்செய்யச்
சிந்தைஞானமெய்ப்பொருடிகழ்தேவகூதைத்தேன்
கந்தமாமலர்க்கழலிடையருச்சித்துவணங்கி
விந்தைதாயகவினையறுத்தனெனவிளம்பும். (கஅ)

பீடிலாவியபிரமகற்பப்பிரளயத்தின்
சேடசாயியாய்த்திருவொடுமனந்தவண்டங்கள்
வாடுறுமலருந்திசேர்வயிற்றிடையமைத்துச்
சூடுறுக்கனகக்கலன்றுலங்கிடவமர்வாய். (கக0)

தாயதான்முகன்முதலினோர்தமைத்தருசோதி
யாயநீயெனக்கறிஞுறும்புதல்வனுயெழுந்த
மாயமென்கொலென்றறிகிலேன்மறையினமயக்கு
நாயகாவெனத்துதித்தவள்பின்னருளவில்வாள். (கக0)

சுனகனுக்கெரித்திடுமருட்டிர்க்குணனெனினு
மனகனின்பெயரறைந்திடினவனுவகெவைக்கும்
புனிதன்மற்றவன்கிரிகையேபொறையுறுதவமு
மனலினெய்சொரிவேள்வியுந்தருமமுமாமால் (கக0உ)

எந்தைநீயெனக்கின்புறுமதலைநீயயன்றன்
றந்தைநீமகத்தலிவனீதாமரைவயங்கும்
விந்தைநாயகவித்தகவிபுலியின்கொழுன
சுந்தராவெனத்துதிததடிதொழுதிறைஞ்சினளால். (கக0ஊ)

மாயனுகியகபிலமாயவனருட்படியே
தூயதாஞ்சாசுவதிமாநதியினிற்றுலங்கப்
பாயயத்தினிற்படிந்தியோகத்தினையியற்றிக்
காயநீக்கியேயரியமர்பதத்தினிற்கலந்தாள். (கக0சு)

சுத்தையாகியதேவகூதைத்திருத்துயர்கூ
ரத்திமுன்வருபரமன்றன்பதத்திடையடைய
மெய்த்தவத்தினுற்கழித்திடுங்குரம்பைவீழ்தலமே
சித்தமாநதியாகியடையருறச்சிறந்த. (கக0ஙு)

கந்தமார்குழற்றேவகூதைக்குமெய்கழறுஞ்
சுந்தரஞ்செறிகருத்தமன்றனக்குமொண்சுதலுய்த்
தந்தைதாய்கதிபெறவருட்கபிலன்றன்சரிதை
விந்தைநீயுணரென்றியாழ்முனிவிளம்பினனுல். (கக0சு)

கபிலப்படலம் முற்றிற்று. ஆதிருவிருத்தம் - கஙஙு.

விரதமோன்பெண்ணில்செய்துவிளங்கியவேள்விமூற்றிச்
சரியின்மாதவமியற்றித்தானங்கள்பலசெய்தாலு
மிருமையார்சுவர்க்கத்தெய்திப்பின்னருமிம்பர்வீழ்வ
ரரிபெயருரையுந்தொண்டீரழிவிலாப்பதம்பெற்றுய்ய. (க)

வேறு. ஒள்ளியனெனமெய்யுறவுபோற்றிரிந்துள் விணையிலுற்றலிவனைக்கெடி
க்குந், தெள்ளியகுணமில்செறுநரைப்போன்றுதினந்தழைவுரைவிலாத
ருந்து, வெள்ளயமெனநல்லறிவுரையறியாததன்மமேவினைத்துவெந்ர
கிற், றள்ளுமென்மனனேயினையிலாமுகுந்தன்முளினைவழுத்தியாமுய்ய.

வேறு. சரியிலெண்டேவகூதைசதுமுகன்றனையழைத்து
மருவவேசிறுவருகிவயங்கியகபிலன்காதை
விரிபுகழ்விதர்ப்பன்பெற்றமெல்லியல்கேட்டுப்பின்னுங்
கரியமாலியற்றுஞ்செய்கைகழறெனமுனிவன்கூறும். (ங)

ஆயிரமுடிகண்டோள்கால்பெயரதாமாதியன்பாந்
தூயசின்மதலைக்காகியவுணர்கோனறைந்தசூணிற்
சீயமாயெழுந்துதோன்றியுகிரிலுலறனிறீயோ
னெயவேபோழ்ந்தகாதையொப்பிலாய்கேளென்றுரைதும். (ச)

இருணியாயெழுந்தசோதியிரணியாக்கனைத்தான்கொல்லு
முரணுறுமசுரனைவிரணியன்முனிவிறைஞ்சி
மருணயமிலாதகாலசேயருக்கரன்கிரிட்டன்
கருணையில்காழ்ந்தாபனிவரொடுங்கழறலுற்றான். (ஞ)

கிரியுருவாகிவந்திங்கெம்பியைக்கிளர்ந்துசெற்ற
யரியினையானேகொல்வனமரரைவதைத்துநீங்கள்
விரிவுறுவேதமெல்லாமழியவேள்வியைச்சிதைத்துத்
தரையினின்முனிவரொல்லாந்தவஞ்செயாதியற்றுமென்றான். (ட)

இரணியன்மொழியைக்கேட்டாண்டிலகரன்கிரிட்டனேமிக்
கருணையினிசும்பன்சும்பன்சம்பரன்காலசேயர்
விரைவினிற்கரிதேர்குந்தமிருகவாகனத்திலேறிச்
சுரருலகத்தினெய்தித்தேவனைத்தூரத்திறைஞ்சி. (ண)

மாதவர்தவங்களெல்லாமறித்தவர்வைகுங்கானிற்
பாதவமெல்லாநூறிப்படியினின்மறையோர்செய்யு
மேதமற்றிலங்குவேள்வியெண்ணிலவழித்துநீறு
மோதித்துண்மரங்கள்வாழுமுயற்சிசெய்தார்களன்றே. (ஏ)

இரணியன்றமர்களாலாண்டிமையவர்முனிவரொல்லாம்
விரைவினிற்கரந்துபாறவேள்விகளழியப்பொன்னின்
வரையெனவிருந்தான்றேயமறறவன்றேவியாவாள்
கருவயிற்றிடையிற்றோன்றக்களித்தவணிருக்குமானின். (ஐ)

எம்பியைக்கிரியாய்க்கொன்றவிருடிகேசனைக்கொல்ல
வம்பவிழ்மலரோன்றன்னுல்வரங்கள்பெற்றிடுவனென்று
சம்பரன்முதலிலுணைத்தன்பதிக்காகவைத்தே
உம்பர்கள்வெருவத்தீயோன்றவஞ்செயவொருப்பட்டானுல். (கo)

வாயுவேயுணவதாகமதுடன்பதினெண்முகிப்
பாயுமிந்திரியமெல்லாமடக்கிவெம்பழுவந்தன்னிற்
றேயுவிளப்பணிகித்திசைமுகன்றன்னையுள்கி
நேயமாயுனைகங்காலகிறைந்திடத்தவஞ்செய்தானுல். (கக)

தாலமேலனைகங்காலந்தவஞ்செயுமிரணியன்முன்
றேலுடன்றசைகளெல்லாமழிந்துசெஞ்சோரியற்று
ஞாலமேலத்தியெய்தவதனினற்சீவனேங்கக்
கோலமாரயனைத்தானுட்கொண்டுமாதவஞ்செய்தானுல். (கஉ)

திதிசுதன்குரம்பையோரவியத்தியிற்சீவனெய்தச்
சதமுகன்றன்னையுன்னித்தவஞ்செயுநாளிற்றேவர்
பதியிரணியன்முன்வைகும்பழுவத்தினெய்திச்செய்த
வதன்மமார்பாவத்தாலேயிவனுடலழிந்ததென்முர். (கங)

துன்னியபவத்திலுலேதுலங்குமெய்யழிந்துவீழ்ந்திங்
கொன்னலன்மடிந்தானென்றங்கும்பர்கோன்களிப்புக்கொண்டு
பொன்னின்வண்ணத்தான்வைகும்புரியிடைவினவினெய்த
பின்னையிற்றவுணரெல்லாமிடைந்துவந்தெதிர்த்தாரன்றே. (கச)

சம்பரனழியேதிசகுனிசாந்தாபனுக்க
னும்பர்கணடுங்குங்காலகேயர்களுடன்வந்தார்த்துக்
கம்பினமுழக்கிக்கும்பிகந்துகமிருகமெல்லாம்
பம்பவைவேல்வாள்விட்டுப்பகழிகள்பொழிந்தாரன்றே. (கரு)

அவுணர்கண்முனிவினேடுமாயுதம்பலவும்விட்டுச்
சிவனெனமுனிந்துதாக்கத்தேவர்கடேரண்டுகூடிக்
கவனமாக்கரிகளெண்ணில்சுகமிருகங்கள்மீதி
னிவர்சிலைவாளிதூவிநிறைந்தெங்குமெதிர்ந்துசார்த்தார். (கசு)

எரிசினத்துடனுந்தியவவுணர்களெழுவும்வாளுஞ்
சரியில்வெம்படையும்விட்டுச்சாயகஞ்சொரிதலோடுஞ்
சுரர்கண்மெய்துளைக்கப்பீதிதொடர்ந்திடவோடலோடுங்
கரியினைவலாரியுந்திக்கடுங்கணைகொரிந்தானன்றே. (கஎ

இந்திரன்முனிவால்வெய்யகணைசொரிந்தெய்தலோடு
மந்தகன்றுவட்டாக்காமனலரிவெவ்விடையையூர்வோன்
சந்திரன்முதலாயுள்ளோர்தழலெழவிழித்துத்தாக்கிக்
கந்தரம்பொழிவபோலக்கடுஞ்சரஞ்சொரிந்தெயார்த்தார். (கஅ

சுரர்பதிதம்மர்களோடுஞ்சுடுகணைசொரிந்துங்கார்ப்பக்
கரிபரிபிரதம்வெய்யகுமிருகங்களெல்லாம்
விரைவினின்மடிந்துவீழுவினையுறுமசுரர்களை
லுரனையறலுமோடித்திசைதொறுமொளித்தாரன்றே. (கக)

உரனெலாமழிந்துதியவசுரர்களோடலோடுஞ்
சுரமொழுந்தார்ப்பத்தெய்வதுந்துமிமுழங்கநேரி
லிரணியன்மனைவிதன்னையிந்திரன்பற்றியேகச்
சுரர்முனிதடித்திந்தாரிதனைவிட்டேகென்றுசொன்னன். (உ0)

சுரர்முனியுரைப்பக்கேட்டுத்தும்பிவென்னுறுவோன்சொல்வா
னெரிசிறிதென்றுநூறுதிருந்திழிற்காட்டமெய்த
விரைவினின்றுலகமெல்லாம்வீக்குவபோலிந்தாரி
தரிகருச்சிறுவனுகிற்கருமமன்றென்றுசாற்றும். (உக)

இவள்வயிற்றுதையமாகுங்குமரனையிமைப்பிற்செற்று
நவையறவிடுத்துமிந்தநாரியையென்றுகூற
உவமையின்முனிவனேரிலும்பர்தம்மிறையைநோக்கிப்
பவமறுபுதல்வனுகப்பயக்குமிவ்வனிதையென்றன். (உஉ)

இரணியன்மனைவியானவிவள்வயிற்றுதிக்குஞ்செம்மல்
கருணையங்கடலாய்த்தூயகருடவாகனனுஞ்சோதி
தருணமார்பதங்கள்போற்றும்பரமபாகவதன்றுண
மரணமக்காகியேநம்மிடரறுத்தருள்வனென்றன். (உங)

நாரதனிவைகள்கூறநலமிலாவிரணியன்றன்
பாரினையவிடுத்துத்தேவர்பதியும்வான்பதியிற்சேரச்
சீருறுமுனிவனந்தவனிதைதன்செவியினேரி
லரணனீறிலாதபரனென்றுநவிலலுற்றன். (உச)

மலரயனுடனுமண்டமெண்ணிலவகுத்துக்காத்தங்
கிலையெனத்துடைத்துநின்றேயாவர்க்குங்காண்கிலாஅ
யலகிலாவிளையாட்டாடியன்பருக்கெளியனுகி
யிலகியாண்டவர்முன்னிற்குமிறையரியதிறியென்றன். (உஞ)

இறையரியென்றுகூறுமியாழ்முனிதானல்குஞ்
சிறுவனப்பரமன்றன்னைமறக்கிலாஎன்றுசெப்பி
நறுமலர்க்குழலியுன்றன்கணவனுஞ்சிறிதுநாளி
னுறுவனென்றுரைத்தன்கேகநாரிதன்பதியிலுற்றுள். (உசு)

சுரர்முனிவிடுவித்தேகத்திதிசுதன்மனையிதூய்தாம்
புரிதனில்வைகுநாளிற்புவியினிலுடனீருன
விரணியனத்திதன்னிற்சீவனுற்றெறண்கடீணைனைப்
பரிவுடனினைந்துரையப்பங்கயத்தவத்தோன்வந்தான். (உஎ)

அன்னவென்னுறுவோனெய்தியத்தியிற்சிவன்வைகத்
தன்னையங்குனிப்பல்லாண்டுதவஞ்செயுமவனேநோக்கி
யுன்னுடலெழில்சேர்ந்தொப்பிலோங்கல்போல்வளர்தியென்று
சொன்னகான்முகன்றன்முன்னரிணிபன்றியங்கிநின்றுக். (உ-ஏ)

தசையுறுதோலுங்கூடித்தமனியவரையிணைங்கி
யசுரர்கோனெழுந்துதுயவயன்றனவணங்கியேத்த
வசையிலாவயனீகேட்டவரமெலாந்தருவனென்றே
யுசனனல்லாசானுகவுயரவுணனுக்குச்சொன்னன். (உ-கூ)

மனைமலர்த்தவத்தோனிவ்வாறுனைத்திடத்திதிதன்மைந்தன்
சுரரிறையியக்கர்தேவர்நிருதர்களசுரர்தூய
வரியரன்றிக்கிலுள்ளோரயனெனுநீபூலோக
நரரிலுகாரியாலுஞ்சாவிலாவரநல்கென்றுன். (கூ0)

பின்னருங்கூறுவானீள்பிருதிவியப்புவாயு
வன்னியாகாயந்தன்னின்மடிகிலாதிரவியோடுந்
தன்னவக்கிரகத்தாலுந்தூயமாதவர்களெனுஞ்சி
லுன்னியசாபத்தாலுமுயிர்விடாதருடியென்றுன். (கூக)

நிகரிலாநேமிசூலங்குலிசம்வேனீண்டபானை
மிகல்புரிவாளிவேறுமென்வருமாயுதத்தாற்
பகலிடையிரவினுள்ளிற்புறத்தினிற்பணி யின்மற்றுங்
ககமிருகத்தினுலுங்கடிகிலாவர நல்கென்றுன். (கூஉ)

இரணியனிவைகளெல்லாமியம்பிடமுறுவலெய்தித்
தருணமார்கமலத்தோனுந்தந்தனனென்றுபின்னு
முரணுறுபடைகளெல்லாமருளித்தன்னுலகின்முந்த
வருணயமிலாததீயோன்றமருட்டனடைந்தானன்றே. (கூஎ)

சம்பரன்முதலிவேர்கள்சலதிபோன்மிடைந்துசூழ
வம்பரத்திரதமீதினமர்ந்துபொன்னுலகத்தெய்தி
யும்பரோடதிதிமைந்தன்சசியொடுமொளித்துப்பாறக்
கம்பினைமுழக்கிவெய்யகணைசொரிந்தார்த்தானன்றே. (கூசா)

இந்திரனனலோன்காலனிருதிநீறிறைவன்வாயு
மந்தியதுபேரனீசன்முறிந்திடவடர்ந்தெயெட்டுத்
தந்திகள்பீதியோடுமிரிந்திடக்கரத்தாற்சாடி
யிந்திரைகொழுனன்வைகும்பயோததியெய்திச்சொல்வான். (கூடு)

எம்பியைக்கொன்றகள்வாவெதிர்த்தியென்றுறவேயார்த்துச்
செம்பொன்மால்வரையுநானத்திரண்டதோர்கணைதனைக்கொண்டு
வெம்பியேபயோததிக்கண்மிடைந்தெங்குங்கலக்கித்தேட
வம்பரனனந்தனேடுமவன்முன்றன்றேருன்றனனன்.

(கூசூ)

மந்தரவலையுகாணுங்கதையினன்மறுவிலாப்பாற்
சிந்துவைக்கலக்கியெங்குந்திருவிளையகனைக்காண
னிந்தனையுறத்தானேமிகேர்கிலாதொளித்தானென்று
புந்தியின்மகிழ்ச்சியாற்றன்றோளிடைப்புடைத்தேயார்த்தான். (கூஎ)

செருவிடையெதிர்ந்திடாமற்சிறந்துநீதுயிலுமேவு
மரவொடுமொளிந்தகள்வாவுன்னையானண்டமுற்றும்
விளாவினிற்றேடிக்கொல்வன்குருதியால்விடைகொம்பிக்
குரியதாங்கிரிகையெல்லாமுதவுவனென்றங்கார்த்தான். (கூஅ)

அரியினைக்காண்பாருகியமார்கள்பதிபெண்டிக்குஞ்
சரியில்பொற்கிரியோடெண்ணில்பிறங்கல்கடனினுருதேடி
விளாவினிலரன்முன்வைகும்விலங்கலிதேடிவாசப்
புனாமலருறைவோன்வைகும்புரியினையடைந்தானன்றே. (கூக)

விளாபுனாமலரோன்வைகும்பதியிடைமேவிக்காணன்
சரியில்காருணிகவைகுந்தத்திலுங்காண்கிலாது
விரணியனண்டமுற்றுந்திரிந்தரியில்லையென்று
சுரரொடுமுலகமூட்கத்தோள்புடைத்தார்த்தானன்றே. (கூ0)

அரிதனக்கஞ்சிவானண்டத்திலாதகன்முனென்று
விளாவினிற்பதியின்மேவிவிடநிகரவுணர்சூழ
விரவியாயுலகமெங்குமிலங்கிநற்சோமனுகிச்
சரியிலாவிமானமீதிற்றயங்கியேதிரிந்தானன்றே. (கூக)

அரவதாயவனிதன்னைப்பரித்தமப்பாரையாண்டு
சுரரிறையாகித்தேவர்துதிக்கவப்பதியின்வைகிக்
கரியதாய்க்கரியையேத்துங்கடலரசாகிவாணு
ளெரியதாய்வாயுவாகியமனுமாகுவாளுல். (கூஉ)

கொண்டலாய்ப்பொழியுமோங்குங்குபேரணயிலங்குகோரி
லெண்டவரியற்றும்வேள்வியவியெலாமினிதினுண்ணு
மூணடகன்பதியினெய்திமூவுலகுக்கும்விஞ்சு
மண்டர்நாயகன்முனென்றங்கவன்றுதித்திடவேவைகும். (கூங)

பாரிலேழுலகமெல்லாம்படைத்தளித்தழிப்போனுகி
மேருவினுச்சிதன்னின்வீற்றிருந்தியர்காலாலே
வாரியையுழக்குமண்டமுகடுறநிற்கும்வண்மை
யாரவேயிருக்கிற்சேடனயர்ந்துடனடுங்குமம்மா. (கூச)

பிரணவத்துடனேயட்டாக்கரமெனும்பெருமையோங்கு
மரிபெயருடனுகக்கனஞ்செழுத்தினையுமாற்றி
யிரணியகமவென்றேத்தியிருடிகண்மறையோர்யாரும்
பொருணலமுறும்வேதங்கள்புகன்றிடுவார்கண்மாதோ. (கூரு)

வாயுவைநகர்ந்தேயோங்கும்வானையிடைத்தழல்கள்சூழப்
பாயவேயோகஞ்செய்யும்பழுதிலாமுனிவரோனும்
தூயவெட்டெழுத்தும்பஞ்சாக்கரத்தையுந்தரந்தசோதி
யாயவணிவன்ரூனென்ரண்டிரணியபமவென்பாரால். (சசு)

மூவுலகுக்குந்தானேமுதல்வனுயவுணர்க்கெல்லாங்
காவலனுகிவாழுங்கடியனுமிரணியன்றன்
றேவிதன்வயிற்றிலோங்குகருப்பம்பல்கால ஞ்சென்றே
யோவியத்தெழுதவொண்ணுவுருவுடைம கனைத்தந்தான். (சஎ)

அறன்மறைநீதியோங்கவமரரோடெவர்க்குமேலா
மிறையவன்றனக்குநல்லசகுனங்களெழுந்துதோன்ற
மறமுறுமசுரர்க்கெல்லாம்வாமங்கடிப்பவேதான்
பொறையுறுமவனிபோற்றப்புதல்வனுமுதையமானுன். (சஅ)

குமரன்வந்துதித்தானென்ரண்டிரணியன்றனக்குக்கூற
வமரர்கடிப்பகீரிழுத்தன்கோயிலெய்திச்
சமர்செயுந்தடக்கைதன்றற்றனையனெனெடுத்துப்புல்லிக்
கமையிலாவெறுப்பில்லாதகலனெலாமணிந்தானன்றே. (சக)

சரிவளைதிமிலேபரிமத்தளியிடக்கைதக்கை
முரசுகாகளங்கள்சின்னமுருமிமுழுதிகியார்ப்பத்
தெரிவையர்வீதிதோ றுஞ்சிறந்தசோபனங்கள்பாட
விரைகமழிளநீர்நெய்பால்வீசினர்புரியினெங்கும். (ரூ0)

இரணியன்றனக்குத்தூயகுமரன்வந்துதித்தானென்று
தரணியிலவுணர்வீரர்நிருதருந்தாமுமாட
வருணலமிலாதார்மாளவரியன்பனைட்டந்தானென்று
கருணையால்விபுதரெல்லாங்களித்தெங்குநடித்தாரம்மா. (ரூக)

மூவுலகுக்குஞான முதிர்ந்திடக்கனிகணில்லாத்
தேவர்கண்மலினமெல்லாந்தீரஞான்மறைகளோது
நாவலர்மகிழநாராயணவெனுநாமமோங்கப்
பாவமற்றிடத்தானேந்துபருவமாப்வளர்ந்தான்பாலன். (ரூஉ)

பெருமையாற்பிரகலாதனுகியபேருமாகிப்
பரமபாகவதனுவான்பருவமைந்தாகித்தோன்றக்
கருமைசேர்மனத்தனுனவிர்ணியன்களித்துநோக்கி
யருமறைசிறுவனேனுங்காலம்வந்தடைந்ததென்ரான். (ரூங)

னண்டவர்க்கதிபனுகியயங்கியவுசனன்மைந்தர்
சண்டனேடியருமற்கன்றமையழைத்தென்றன்செம்மன்
முண்டகன்மகிழவேதமொழியவோதுவியுமென்றே
கண்டகனுரைப்பக்கேட்டுக்களித்தவர்தலைமேற்கொண்டார். (ரூசு)

பறு. இறைவணுகியாண்டிலங்கியவிரணியன்பயந்த
சிறுவனேடுயர்சண்டனுமற்கனுஞ்சென்று
மறையையோதிடுமிடத்தினின்மன்னியேயமர்ந்து
நிறையும்வேதத்தைநிகழ்த்திடமுயற்சிசெய்தனரால். (நிந)

தூயதாகியமுகுர்த்தத்திற்சுருதியையறைய
நேயமோடியரிரணியனமவெனநிகழ்த்தென்
முயுமாமறையசுராராசான்மைந்தரணையத்
தியகோவெனச்சிறுவன்றன்செவியிடைமடித்த. (நிசு)

அந்தணதிபரிரணியனமவெனவறைதி
மைந்தனேயெனுஞ்சொல்லிடமாமெனமதிப்பச்
சிந்தைவெந்திருகரத்திறற்செவியைப்பொத்தினை
லந்தியாற்குவிருனினம்போலானனங்கருக. (நின)

அரிதிருப்பெயராகியஆட்டவக்கரத்தைப்
பிரணவம்முதலாகவன்புளமுறப்பேசிக்
கரதலங்குவித்திருகணீர்கலுழவொண்சிறுவன்
சரிரரோமங்கள்புளகிப்பத்தான்மகிழ்ந்திருந்தான். (நிஎ)

சிறுவனெட்டெழுத்தினையுறச்செப்பிடலோடு
மறுவில்சண்டனுமற்கனுமுயிரறமலிந்தீண்
டிறுதிகாலம்வந்தடுத்ததாயின்றெமக்கென்ன
வறிஞுகியபுதல்வனேழிதையறைந்தனரால். (நிக)

மைந்தநீயுனாமாயவனண்டம்விட்டேக
விந்திரன்கமலாசனனிமையவர்பிறரும்
வந்துநித்தலும்வருத்தியிங்கேவல்செய்திவ
ருந்தையேயண்டங்காக்கின்றவொருவனுயர்ந்தான். (சூ0)

ஆதலாலிறையரியலனுந்தையாமவன்பே
ரோதுவாயெனச்சண்டனுமற்கனுமுரைப்ப
நீதிமல்கிடவளர்ந்திடுஞ்சிறுவனேமியன்றன்
பாதமேசரணென்பதுசுருதியாற்பகர்வான். (சூக)

இரவியேகிடவெழுந்தமின்மினியையென்றுவுக்குச்
சரியெனுமொழியறிவிலர்போற்சதுர்வேத
முரைசெயாதியைவிடுத்துத்தண்டிலமிகழ்ந்துமியைப்
பருகுவாரெனவிரணியனமவெனப்பகர்வீர். (சூஉ)

சுதையிகழ்ந்துவர்சுரையினைப்பருகுவார்போன்றும்
பதியையோவியேபரனையிச்சித்தவள்போன்று
மதிகவீடருளரியெயரதிந்துயாதழீதுன்
மதியினுலிரணியனமவெனுமுரைவகுப்பீர். (சூஙு)

பழுவமெய்தியும்பரூப்பதமெய்தியும்வெய்ய
தழல்வனைந்திடத்தவஞ்செயும்யோகியனொனினு
மழிவிலாதுயரரிபெயர்நினைக்கிலராயிற்
கொழுவுகோலுருக்கொடியெனச்சுவர்க்கமுற்றிழிவார். (சுச)

மறுவிலாதுயர்மாதவன்பெயரையாதேனுத
விறுதிகாலமின்றுமக்குவந்ததுவெனவிளம்பு
மறிவிலீராஃதுறுமுமக்கரிபரனென்னு
முறுதியெண்ணிலாதிரணியநமவெனுமுளையால். (சுரு)

அன்னைதன்வயிற்றமருநாளரிபரனெனயான்
முன்னநான்மறைப்பொருணுணர்ந்தேன்மருண்முடுகி
மன்னுஞானமின்மதியிலீனெஞ்சிவ்விடத்தி
லென்னவோதுவிப்பீருமைக்கேட்பதேதென்றான். (சுசு)

பெருகுநீனெப்பிரமைசெய்தானிவிரும்பு
மிருகமாமெனவறிவிலீரும்முடன்மேவ
வருகனல்லனியானெனவுரைத்தவர்கணியகழ்ந்து
முருகுமல்கியதுளவணிமுகுந்தனைத்துதித்தான். (சுள)

அரிதிருப்பெயரைநுவான்றன்னருகிருந்தே
மருவியோதிடுமதலையர்தங்கணேநோக்கி
யிருளகற்றிடுங்குருவெனவிருந்திவணும்மை
நரகினுய்த்திடுவாருலாநம்பன்மினென்றான். (சுஅ)

நினையமெய்திடநேரிடுங்குருவினேநோக்கி
மருளொழிந்துயர்பத்தியின்வைகியான்சொல்லு
முனையைநம்புதிருமக்கியான்சுரர்முனிமொழியும்
சரியின்மாமறைப்பொருள்பகர்வேனெனச்சாற்றும். (சுக)

தந்தையாகியவிரணியன்றவஞ்செயுநாளி
னிந்திரன்னெனைப்பயந்தவடன்னைக்கொண்டேக
மூந்துநாரதமுனியென்றனன்னையைவிடுவித்
தந்தமாதவன்பகர்ந்தனன்கேண்மினென்றறைவான். (எ0)

அண்டரண்டங்களெண்ணிலதன்னிடையமர
முண்டகம்மெனுமூந்தியிலயனுமூவுலகு
மண்டியேயெழுந்திடவளித்ததுதனைவாயா
லுண்டுமிழ்ந்திடுந்தவறெப்பிலாவொருவன். (எக)

ஏகமாகியபிரணவத்துள்ளிருப்பவனுஞ்
சாகரம்மெனத்தழைத்திடும்வேதசாத்திரத்தி
லோகையாருபனிடத்தினிலுயர்ந்தொளிர்பவனு
நாகமேலமர்ந்தேயருணைமூர்த்தி. (எஉ

உவரியாகியபிறப்பினேயொழித்திடுபவனும்
பவர்கள்மாண்டிடப்பலவுருவாயெழுபவனுந்
தவர்களுக்குயர்தன்பதமளித்திடுபவனு
முவணமீதமர்வோனுயர்வைகுண்டத்தொருவன். (எங)

ஆதியேயரியவனலாலிறையிலையெனவான்
மூதலாமுனியென்னையீன்றிடுமனைக்கிதமா
யோதிணைவருதரத்திற்கருவிலுள்ளிருந்தே
யாதரத்தொடுமோர்ந்தனன்யாவனெனவறைவான். ஙு)

மருணிறைந்திடுமுசனன்றண்மைந்தர்வாய்மையிரு
விரணியகமவென்றிடும்பவங்கழித்திடற்
கருணையங்கடலாகியபரனையுங்கருத்தி
னரணதாகிநீரடைந்துய்மினென்றிவையறைந்தான். (எரு)

அறிருனிம்மொழிபகர்ந்திடவருவினையகலுஞ்
சிறுவர்சற்குருவிவனெனவிரணியன்செம்ம
லறையுமாபுவனட்டவக்கரத்தினைக்கருத்தி
னிறையவோதித்தாம்நிகரிலாக்சதிபெறப்போனர். (எசு)

சிறுவர்சுக்கிரன்புதல்வர்சொலிகழ்ந்துசீதரனு
மிறையைநெஞ்சமைத்தேகலுமிரணியன்மதலை
நெறியிலாச்சண்டமற்கரிநீரரிபெயரை
யறையுமிவ்வினையறவெனவவரஞ்சியகன்றார். (எள)

அரியெனும்பெயரசுரர்கோன்சுதனறைந்திடலும்
வெருவுநெஞ்சினர்மெய்குலைந்தோடியேவினைவின்
வனையெனத்திகழ்மடங்கலாசனத்தின்வீற்றிருந்த
விரணியன்றனைவணங்கிநின்றிவையுரைத்தனரால். (எஎ)

மறையையோதவுன்மைந்தனுக்கியான்சொலும்பொருளை
யறைகிலானவனீதியாம்பொருளினைமொழிந்தே
யிறைவவெம்மருங்கிருந்துவேதத்தினையியம்புஞ்
சிறுவர்நீங்கவெவ்வுரையினைச்செப்பினனென்றார். (எக)

உசனன்மைந்தர்களுரைத்திடுமொழியினைக்கேட்ட
வசுரர்கோனென்றன்சிறுவனீருரைத்தசொல்லகற்றி
விசனநீருறப்புன்மையாய்விளம்பிடும்பெயரை
யிசைகொணுவினீரியம்பிடுவீரெனவிசைத்தான். (அ0)

சீலமில்லவனுரைத்திடுமென்றவண்செப்பக்
கோலவந்தணர்குலேந்திருச்சிகளைப்பொத்தி
யாலமன்னசொல்யாமுனக்கறைந்திடற்கடநின்
ரூலவெந்திடுநினையத்திற்சார்குவமென்றார். (அக)

உசனனமைந்தர்களுளைக்கிலருளாநடுங்கிடலு
மசுரர்மன்னவனருகுசின்முர்கனைநோக்கி
வசையிலாதவென்மதலையைக்கொணருதிரெனலுங்
கசநிகர்த்தவர்மறையையோதிடங்கடிதற்றார். (அ2)

அந்தணாளர்கள்சிறுவர்கள்கூடியாரணத்தின்
சந்தையோதிடஞ்சார்ந்தவர்பிரகலாதனைத்தா
னுந்தையுன்றனைக்கொணர்திரென்றுரைத்தனனெனலுந்
தந்தைபாதத்திற்சற்குணன்சேர்ந்தடிதாழ்ந்தான். (அங)

வந்துகைதொழுமதலையையிரணியன்மார்பிற்
சந்துடன்கலனழுந்துறத்தழுவிமாடிருத்தி
யந்தணாளர்கண்முனியகியறைந்திடும்பெயரை
மைந்தனேயெனக்குரையெனமொழிந்தனன்மகிழ்வான். (அச)

தாதையிவ்வுரைபகர்ந்திடத்தனையன்கைகூப்பி
வேதமோதுதன்முன்னரின்விளம்பிடும்பெயரை
யோதினேனெனவவுணர்கோனுவப்பொடுமதனை
யீதெனுவெனக்கியம்புதிதெரியநீயென்றான். (அடு)

கண்டகன்னிவைகழறிடக்கடிதினிற்சிறுவ
னண்டமுற்றவுமமர்ந்தவனுயிரம்பெயரி
னெண்டவத்தினரளியுடனியம்புமெட்டெழுத்தை
முண்டகன்றுதிசெய்திடமொழிந்தனனன்றே. (அசு)

கரங்குவித்திருகண்ணினீர்படிமிசையுறநற்
சிரங்கைகால்விழிபெயர்கவாயிரமுடைச்செல்வன்
குரங்கலோசனியாகியதிருமகள்கொழுன
னுரங்கொணுமமீதுணருதிரீயெனவுரைத்தான். (அஎ)

வேதமீனமிர்தாவதும்வேள்வியின்பொருளுநம்
போதன்முக்கணேண்புகல்வதும்யோகிகள்பொருந்து
வோதுநாமமுமும்பரினிம்பரினுயிர்செய்
யேதம்வேறறவெழுவதுமினையிலெட்டெழுத்தே. (அஅ)

சனனமாகியசலதியைந்திடநாவா
யெனவெழுந்தகலிம்பரினும்பரினெவரும்
வினைகடிந்துறற்பதத்தினேமேவவேயருளு
மனகணமிவ்வெட்டெழுத்தேயெனவறைந்தான். (அக)

உட்டெளிந்தவஞ்சகமறவொப்பிலாமதலை
யெட்டெழுத்தினையறைந்திடவிரணியன்முனிந்தே
யட்டதிக்குறங்கரியுடனமரர்கள்வெருவத்
தட்டமீவல்லதாமேற்றழலுறச்சைகைத்தான். (கo)

விழியுகாந்தத்தினழலினையுலகெலாம்விரிப்ப
வழலுநெஞ்சினனழகியபுதல்வனைநோக்கிப்
பழயவொன்னலன்பெயரினைப்பழியினின்வானி
னிழிவையெய்திடவழிபவர்யாருனக்குரைத்தார். (கக)

அரனயன்முதலிருடிகளமரரிப்பெயரை
யுரைசெயாரவரஞ்சுவரொளித்துனக்கின்று
வெருவலாதித்தமொழியினைவிளம்பினராலென்
றெரியுநெஞ்சினன்பின்னருமிவைபகர்ந்தனனால். (கஉ)

வனையினெண்வடகிரிகராமெனவயங்கித்
திரியுமெம்பியைச்சினத்துடனிமைப்பின்முன்னுயரு
மிருணியாய்வதைசெய்தவன்பெயரியம்பிடவோ
பரிவிலுனைப்பயந்தனன்யானெனப்பகர்வான். (கங)

இளைபயோததிகலக்கிநானிலையவருலகின்
வனையின்வாரியின்மலரயனுலகினுந்தேட
வெருவிநேர்பொரும்விறலிலாதண்டம்விட்டேகு
முரனிலான்பெயருறுதியென்றுருனக்குரைத்தார். (கச)

மாதவந்தனுலுலகெலாம்வருத்தனித்தழிக்கு
மாதியாகியேமகத்தவியடங்கலுநுகர்வென்
சோதியென்றுநீசொல்லரிபெயரினையொழிந்தென்
பாதமர்ச்சனைசெய்குவார்பங்கயன்முதலோர். (கரு)

புண்டரீகனும்புராரியும்புரந்தான்றனு
மெண்டவத்தரோடருச்சித்துச்செவிப்பொன்பெயரை
விண்டலைத்துளோர்புவியுளோர்விளம்புவதரிதோ
வண்டகோளகைக்கப்புறத்தினவருமறைவார். (கசு)

வேள்வியின்னவிவிலக்கியங்கவன்றனைட்டெழுத்து
மேழிரண்டெனும்பொழிலினிலையெனவடர்ந்தே
னேழைநீசொலுமிறையவனெவ்வலிகொண்டு
வாழுவானெனமற்றவன்பெயரினையறைந்தாய். (கஎ)

உலகுகாயகனுகியேயொளிருமென்பெயரை
மலரயன்முதன்முனிவர்களிசழ்ந்திடின்மடவர்
கலனிலாதவிவ்வுனாயினைநவின்றுநீபிழைத்தாய்
சலமிலாதியான்பொறுத்திடத்தினையனுகையினால். (கஅ)

மழலைகீங்கலாமதலைகீயாதலினிந்தப்
பிழைபொறுத்தனனினியொன்றும்பேசிலுமறையோர்
விழைவுலனைமமறையினைவிளம்புபோதுதியென்
றிழையுலொளிரிரணியனிடம்பினனன்றே. (கக)

தந்தையம்மொழிபுகன்றிடச்சரியிலாப்புதல்வ
னந்தகாந்திகனஞ்சுமவ்வவுணனெயிறைஞ்சிக்
கந்தகாண்மலர்க்கடவுளுங்காண்கிலாதியரும்
விந்தைநாயகன்செயலினைக்கேளெனவிளம்பும். (க00)

கரந்தைசூடியுங்காலனும்வெருவுமுன்றனக்கு
வரந்தருந்தவன்முனுமாய்வானுயரண்டம்
பரந்துமேவியவுயிர்தொறுநிறைந்தொளிர்பரமன்
கரந்தனன்னுனக்கென்றனெயவன்செயல்காணுய். (க0க)

வேதநான்கினும்விளங்கியசாங்கியத்தனினும்
போதரீறணிபுராரிமாதவர்கருத்தினினு
மூதையேயுணவாகுவோருணர்வினுமெட்டா
வாதியோவுனக்கஞ்சியேகரந்தனெனயா. (க0ட)

வாயினூல்கொடேயுலூந்தையோர்வட்டமாய்வனைந்தாண்
டாயதெல்லவுமருந்திடந்தன்மைபோலுயரு
மாயனெண்ணிலவண்டமோரிமைப்பினின்வருத்துக்
காயுமாலதுதன்னுளேகரந்திடவம்மா. (க0ங)

அண்டநீங்கிமால்கரந்தனென்றிவணைறந்தாய்
முண்டகக்கணனிமைப்பினின்முடிவிலாதண்ட
முண்டெனக்கடிதியற்றித்தன்னுரோமத்தினுனியின்
மண்டவேயவைதன்வயின்வாழ்பவன்காண்டி. (க0ச

அரிதுகர்ந்திடாதுயர்மகத்தவியெலாமடங்கப்
பருகினேனெனப்பகர்ந்தனையுண்ணுடலுயிரின்
மருவிநிற்பவன்மாதவனென்றறிகில்லாய்
வினவித்தாமலேவினையுமென்றுணருணர்விலியே. (க0ஞ

வேதமோதுவார்போலவேவிரோதமாம்பொருளை
யோதிகாரணனுலகெலாநிறந்திடுமொளியைப்
பேதையாயினேரறிகிலார்மருளுறப்பிதற்றி
யேதமாகரகெய்துவரொந்தைநீயுணர்தி (க0ட

மறையுனுச்சியிற்சித்தெனுந்தத்துவமருளா
தறியும்யோகிகளரியினையறிந்துவீடுறுவர்
பிறிதொன்முகவாண்டறிவறப்பொய்மையைப்பிதற்றி
யுறுவர்வெந்நிரையந்தனுளெந்தைநீயுணர்தி. (க0

மாயன்மாயையின்மலரயன்முதலினேர்மயங்கி
நாயகன்னெனத்தம்மைதாந்மெய்மையாய்நாட்டி
போய்வுகாலம்வந்துறுபொழுதவன்றனையுள்கி
ஆயிரம்பெயரறைந்துய்வராறிதிகீயெந்தாய். (க0

சாங்கியத்திலும்யோகமார்பொருளினுந்தானே
யோங்குமாயனையுணர்குவரவரறிந்துய்வர்
பாங்கிலாப்பொருள்பற்றியங்குய்குவார்போன்று
தாங்கிலாதெழுசனனமாஞ்சலதியிற்ழுழ்வார். (௬0௯)

மூக்குணங்களுமூவுலகமுமெனமூளாத்துச்
சற்குணங்களாய்த்தழைப்பவர்தமக்குவீடருநந்
துற்குணங்களாமவர்களைப்பகைநராய்த்துணிக்குஞ்
சிற்குணத்தரிசெயலினையார்கொலோதெரிப்பார். (௬௯0)

வேறு. அரியினினினைந்திடாதருநந்தானங்கள்
வினைவினிற்செய்பலவேள்விமாதவந்
தனையினிற்பெருகிடுஞ்சலமில்வித்தென
வினைவினினிட்பலமாகிவீடுமால். (௬௯௯)

மனதினிலரியினைவைத்துநன்குடன்
றினையளவாகிலுஞ்செய்ததானங்க
ளனலுறுவேள்விகளனந்தமாகியே
தினம்வளர்செய்கையைவேதஞ்செப்புமால். (௬௯௨)

இந்திரியங்களினியங்கிவேதமார்
மந்திரங்களின்மிகவயங்கிக்காட்டியே
நந்தலுமநந்தலுநல்குந்தீயர்க்கும்
வந்திடரகற்றுவானவனென்மாதவன். (௬௯௩)

பாலுறுதுப்பெனப்பரந்தெவ்வண்டமுஞ்
சீலமார்ஞானங்கள்தெரிந்துளோர்க்கெலாங்
கோலமாமொளியளைத்தோன்றிக்கோதுறு
மாலமேநிகர்த்தவர்க்கரியனாகுவான். (௬௯௪)

அராவணைத்துயின்றிடுமமலனாகிவெங்
காராவினைவதைத்துயர்களியைக்காத்தருள்
பராபரவஸ்துவுன்பாதங்கண்டுய்ய
நிராசையுற்றவர்க்கலாலினைக்கற்பாலதோ. (௬௯௫)

சகமிசைச்சீவதாபரசங்கத்தினுக்
ககமதாய்ப்புறமதாயவையினல்லனு
யுகமெணில்காலங்களிமைப்பினையக்கஞ்
சுகியுறுவாரியிற்றுயில்கொளும்பரன். (௬௯௬)

கரந்தவன்போலவேகாணும்வான்புவி
பரந்துளன்போலவேபற்றிற்றோன்றிலா
வரந்தருமுதல்வன்றன்மாயவாரியிற்
பொருந்தின்ரலதியார்பொழிலிலீந்திரர். (௬௯௭)

மாதவவரத்தினல்வலனுற்றேயண்ட
நாதனுயினனெனநவின்றுளாயுலர்
பாதவம்வடவையாற்பரந்தெரிந்தபோ
லாதியையெள்கிஞரழிவர்காண்டியால். (ககஅ).

மயர்வறவுயர்ந்திடுமாதவன்றனே
யியல்பலவெள்குநீயென்றுமாய்கிலா
உயிர்கலச்செல்வம்வீட்டுலர்தியென்றியான்
செயலுறுமரிபெயர்செப்பினேனென்ருன். (ககக)

வேறு. சிறுவனெதிர்நின்றிலைவகள்செப்பிடமுனிந்தே
யிறுதியுகமெய்தவருபீசனெனவாயா
லுறுபுகையெழக்கணுமிலங்கியுலகெல்லா
மறுகவிடியஞ்சிடவெருப்பெழுகைத்தான். (கஉ0)

திக்கயமிரிந்தொளிகொள்தேவர்திரளஞ்ச
நக்கனுடனேயயனடுங்கவுலகெல்லா
முட்கிடவுந்தன்மெய்யுலந்துடலிரத்தந்
தக்கவசுரன்பிரகலாதனேமுனிந்தே. (கஉக)

என்வயினுதித்தவிவனெம்பியைவதைத்த
வொன்னலனேயெத்தினனிவன்றனையுரத்தாற்
கொன்மினெனவெய்யவர்கள்கூடிமெய்கயிற்ருற்
பின்னினர்கள்வெல்கதைபிறங்கயிலெறிந்தார். (கஉஉ)

எய்தனர்கள்வாளிமழையெங்கணுமெருக்கிக்
கொய்திடுமினென்றவர்கள்கூர்மழுவெடுத்தார்
வைதனர்களெண்ணில்படைமாவடவைபோலப்
பெய்தனர்கள்பூமிறுபிஞ்ஞகனுமஞ்ச. (கஉங)

எறிந்தபடையெய்தகணையெற்றுக்கதையாவு
முறிந்தனவலாதுகுமரன்மெயினின்மொய்த்தே
யறந்தருமனத்தரியைநெஞ்சிடையமைக்கச்
சொறிந்ததிறனுஞ்செய்கிலதீயர்திரடன்னீ. (கஉச)

மன்னனருகெய்தியெதிரின்மறவரெல்லா
மின்னிலகுமாரன்மெயினெய்தலருமொத்தே
துன்னுபடையாவையுமுறிந்தசெய்திசொல்ல
வன்னியிடையுய்த்துவதைசெய்மினென்றுரைத்தான். (கஉடு)

நிகரில்கனகன்னிவைநிகழ்த்திடலும்வீரர்
ககனமுகடுற்றிடவெழுங்கனல்வளர்த்தே
யிகழ்விலகுமாரனெடுத்ததின்விடுப்ப
மிகவுமெய்குலைந்தலறிரர்விடுதல்லாம். (கஉசு)

நேயர்விடுதியினிலமிழ்ந்துசிறுவன்முன்
மாயவனேஞெஞ்சினிடைவைக்கருளிர்சித
மாயுடலிலங்குவதுகண்டுமறவோர்க
ளேயெனுமுன்னனிடையெய்தியிவைசொன்னார். (௧௨௯)

அன்னவருணைக்கவனலாகுமசுரோசன்
வன்னிதனைவன்சிறையின்வையுமெனவோதி
மின்னெயிலெயிற்றினவன்மேனிகவ்விமாய்க்கப்
பன்னகம்விடுத்திடுமினென்றுரைபகர்ந்தான். (௧௩௦)

வேறு. மனந்தழலுறவந்திரணியனுரைப்பமறவர்கடன்னியேகுவ
வனந்தன்வாசுகிதார்க்கோடகன்குளிகனட்மகாபதுமன்வேற்பதுமன்
கனந்தருசங்கபாலன்றெக்கன்முனிவ்வொண்மர்கடிதின்னெய்திச்
சனந்தனைநிகர்க்குமதலையைக்கடித்தார்தம்விடவெயிற்றிறைக்கவி. (௧௩௧)

ககபதிநடுங்கக்கன்மிசைப்பிறைகணுழற்றெனக்கடித்திடவிடங்க
ளுகவலுசிதையாயெயிறுகளெல்லாமொடிந்துக்குவிழுந்திடவரியை
நிகரிலாக்குமரனினைந்தெழிலிலகன்றிடக்கண்டிடுமசுரர்
புகல்வதற்கரியவலனுடைமனனுக்கிவையெலாம்புகன்றனரன்றே. (௧௩௨)

அரவினங்கூடிக்கடித்திடவிடங்களமிர்தமாயெயிறுகளொடிந்து
தரையினில்விழுந்ததகைமையைக்கேட்டித்தையிலாவிரணியன்முனிந்தெண்
கரியினந்தனைகீர்விடித்திடுக்கொம்பாலவனுயிர்கவர்ந்திடுமெனலும்
வரையெனவுயருமறவர்கள்மிடைந்துமாதிரத்தோல்கலையழைத்தார். (௧௩௩)

வஞ்சனையவுணரழைத்திடவடுங்கிமாதிரந்தாங்கிடுங்கரிக
ளஞ்சனந்தழுதம்வாமனமயிராபதங்கரற்றுண்டரீகம்
விஞ்சியகிரிநேர்புட்பதந்தம்மெய்வினங்கியசுப்பிரதீப
மஞ்சவேயடருஞ்சார்வபூமமிவையெட்டுமென்வரையெனவந்து. (௧௩௪)

மும்மதந்தியாய்முடுகிடவரைபோன்முந்தியதந்திகள்முனரின்
செம்மலைக்கயிற்றூற்பிடித்திடுந்தியர்திரண்டுபாரிடையினின்வைப்ப
மெய்மைசால்குமரன்கரிகளைநோக்கியிட்டங்கரால்மெலியுநுங்குலத்தின்
கைமலையழைப்பக்கடிதின்வந்துதவுங்கடவுளென்மனத்தினனென்றான்.

நிகரிலாக்குமரனிவைநிகழ்த்திடலுநெடுவரைபோலவங்கெதிர்ந்த
புகரிபவினங்கள்வெருவுமாதவஞ்செய்புதல்வனைவணங்கியகிடலும்
ஈகமெனவிளங்குமவுணர்களிவையையிரணியன்றன்னெடுங்கலில
மிகமுனிந்தெனக்குவெண்ணிமிளையவிரும்பிபங்களைக்கொலுமென்றான்.

சிந்தையிற்கனன்றங்கிரணியனுரைப்பத்திறலுடையசுரர்கள்சென்றே
யந்தகனெனவெண்கரிகளைவதைக்கவடர்தலுமவைமிகவஞ்சி
மைந்தனையணுகித்தழுத்தினநிகர்த்துவயங்கிமெருப்பிறற்குத்தி
முந்தியவலரிவெயிலினுலர்ந்தகிடையெனக்கோடலாமுயிர்த்த. (௧௩௮)

திசையுறுகரிகளுரமெடுகுத்தித்திரண்டிடுகோடுகள்முறிந்த
வசுரனுக்கவர்களுரைப்பநெஞ்சழன்றேயளப்பிலாதுயர்ந்தகோபுரத்தின்
மிசையினிலவனேயுயர்த்திநீர்கீழின்விழுத்திடுமடியவென்றறையச்
சுசியுறுநயனர்மதலையையெடுத்துத்துய்யமாசிகரத்தினுற்றார். (கஉசு

யோசனையெழுநூறுயர்ந்திடுசிகரத்துச்சியின்குவடிடைவிளம்பி
யாசகல்புதல்வன்றனையெறிந்திடலுமவனிமாதனந்தமாங்கரங்கள்
மாசறுகடையம்வயங்கிடவேந்திவைத்திடவிழுமியமதலை
யீசனைட்டெழுத்தையியம்பியாண்டன்போடிதையமுமுருகிடவிருந்தான்.

வேறு. தனைமினெண்ணில்கரங்கடயங்கத்தான்
பரவிமைந்தனையேந்திடப்பார்த்தவர்
வினைவினைப்திவிளம்பவிரணியன்
சுரர்நடுங்கிடவேயிவைசொல்லினன். (கஉஎ)

வனையின்மைந்தனைவார்கொடுவீக்கிநீ
ரினையும்வாரிபினுய்த்திடுவீனென
வரனுஞ்சிந்தைமயங்கவவுணர்கோ
னுனைசெயக்கடதுற்றனர்தீயவர். (கஉஏ)

சுந்தரச்செம்மேருள்கனைப்பாசத்தால்
மந்தரம்நிகரும்வனையிற்பிணித்
திந்திராதியரோங்கிநடுங்கவாழ்
சிந்துவின்னிடையுய்த்தனர்தீயவர். (கஉ0)

வனையின்மீதுறமைந்தனவ்வாரிநீர்
சுரருலோகத்திற்றுன்னவிழுந்தவன்
பரணெஞ்சிற்பதிக்கமிதந்திடுஞ்
சரியிலோங்கலின்மீதிற்றயங்கினன். (கஉக)

வேலையேழுடன்மேவியவெள்ளத்தி
னுலினீளிலமேலிலமர்ந்திடும்
பாலனென்னப்பரந்தபரவையிற்
சீலமூற்றகிறுவன்வயங்கினன். (கஉஉ)

வாரிமீதின்றனையின்வயங்கிய
சீருறுஞ்செம்மல்சிந்தையினேழ்பொதிற்
பாரணமுருந்தாபரமாவரி
நாரணவெனவுன்னிநவ்வுவான். (கஉஙு)

கந்தர்தாதையுயர்கமலாசன
னிந்திராதிகளெண்ணிலிருடிகள்
சிந்தைவேதத்திற்செய்யவுந்தோன்றலா
லெந்தைநின்செயல்யானெங்ஙனென்னுதேவன். (கஉச)

விடமுநீசுதைநீயெங்கும்விஞ்சிய
சுடருகீயிருணீபகைநீதுணை
வடிவம்நீவெளிநீமறைநீவரு
மிடருநீயதொழித்திடுமீசனீ. (௧௮௫)

தந்தைதாயெனத்தந்தவர்நீயவர்
முந்துவெம்பகையாகமுடுக்கிய
வெந்தைநீமறையெண்ணவுமெட்டலாச்
சுந்தராவுனையாரெனங்ஙன்சொல்லுவேன். (௧௮௬)

வெறிகொண்மாமலர்மேதன்முதலினை
றிறைவனெனவெண்ணமயக்கியே
யுறுகலாதங்கொளித்துருவாகுவாய்
சிறியநானுன்செயலெங்ஙன்செப்புவேன். (௧௮௭)

படியும்வானும்பரந்துநிறைந்தநின்
வடிவையேதறிந்தேத்துவன்மாயநின்
னடியர்தங்களடியரடியினிற்
பொடியதாகுந்தவமிலிப்புன்மையேன். (௧௮௮)

அழல்கள்சூழவளப்பிலுகந்தனி
லுழலுமாதவருன்னவுமெட்டலா
வெழிலிவண்ணவிடர்கெடவாவென்றே
மழலைநீங்கிலாவாய்கொடங்கேத்திரு ன். (௧௮௯)

வேலியின்மிதக்கும்வளைமீதினின்
சீலமார்சிறுவன்வயங்கக்கண்டே
யாலமன்னவரோடியவுணர்கோன்
பாலடைந்திச்செயலெப்படர்ந்தனர். (௧௯௦)

கேட்டவேந்தன்கிளர்ந்திடுவெந்தழல்
நாட்டமெய்தநகைத்துநஞ்சேயினை
னீட்டத்தாலிமைப்பின்னவனின்னுயிர்
வீட்டுவிப்பனென்முன்விடுமென்றனன். (௧௯௧)

மறலியஞ்சவசுரர்மன்கூறலு
முறைமைசெய்கிலாமூர்க்கர்களெய்திநற்
சிறுவனைப்பற்றிச்சென்றுதயித்திய
நிறையவன்முன்னொய்தியிருத்தினர். (௧௯௨)

சிறுவனைக்கண்டுசிறியிரணியன்
முறைமையில்சம்பரன்முதலோர்களை
யெறுழ்வலிக்கரத்தாற்படையேவிநோய்
நிறையமாயத்திற்கொல்லுமினீரென்றான் (௧௯௩)

தீயனவ்வுரைசெப்பத்தயித்தியர்
காயும்வெங்கதைகீள்கணெயெண்ணில
வேயுறும்வனைவிசிநிறைந்திடு
மாயையெங்கும்வகுத்திடர்த்தாரரோ. (கருச)

ஆலமென்னவசுரர்செய்மாயையாற்
காலகீணிருதித்திரள்காளிகள்
சூலியஞ்சிடத்தோன்றியுகாந்தத்தி
காலவும்பர்கலங்கியிருந்தனர். (கருரு)

அரவினங்கள்கறுத்தவலகைகள்
வரைகள்வாயுவடவைக்கடிவிடஞ்
சுரர்களஞ்சவிவற்றைருடுந்தோன்றவான்
பரவிஞர்பங்கயத்தன்றிகைக்கவே. (கருசு)

மந்தரம்மெனமாக்கதையெண்ணில
வுந்திரத்திவ்வியாத்திரமோட்டியே
மூந்துமாயங்களெண்ணிலமொய்த்திட
வுந்தகனஞ்சவார்த்திடத்தாரரோ. (கருள)

சினந்தழீஇயசுரோசர்செய்மாயையி
னினந்தழீஇயும்பரோங்கவடர்க்கலு
மனந்தசாயியையன்புடன்செம்மறன்
மனந்தழீஇக்கொளவெல்லவுமாய்ந்ததே. (கருழ)

கடியர்விட்டகடும்படைமாயையும்
தொடியின்முன்னரினிற்றுநூறுங்கவக்
கொடியணனவிரணியன்கூரெறு
விடமருந்துவித்தான்சுதன்வீடவே. (கருக)

கடியணிட்டகடுவிடம்யாவையுஞ்
சுடர்கொள்மாதவனைத்துதிசெய்கய
ரடியனுக்கமுதாகிவயங்கவக்
கொடியனெஞ்சுகொதித்தெழுந்தானரோ. (கசுஉ)

கோபம்விஞ்சசுரன்மகனைக்கொல்ல
வாபிசாரமிழைக்கவடர்த்திடும்
பாபமென்னக்கிருத்திபகட்டிறை
மாபயங்கொளவந்துருத்தாளரோ. (கசுO)

இறுதிகாலத்தெழுந்திடுமீசனும்
நிறைபயங்கொளதேத்திரத்தியினல்
மறுகவாரிவடவனல்வெந்துகக்
கறையுயிர்க்குலங்கக்கவெழுந்தனள். (கசுஉ)

அழலுகெஞ்சினளானனமூன்றினள்
சுழலுநாட்டமுமூன்றெட்டுத்தோளினள்
மழலைநீங்கிலாமைம்தனைச்செற்றிட
வெழிலிவாணினெறிந்திடவெய்திளள். (கசூஙட)

கடியகாலையுயிர்ப்புத்தரக்கண்ட
வடவைதேயவளர்ந்திடவாரியைக்
கடையுமத்தின்கயிற்றையணிந்தண்டம்
வெடிபடக்கொக்கரித்தெழுந்தாள்விண்ணின். (கசூச)

சூலம்வேன்மழுததோமரம்பாசமுட
கோலெழுங்கணையங்குறடூட்டிவாள்
காலனஞ்சுங்கரங்கடொறும்விரித்
தாலமென்னவதிர்த்தடர்ந்தாளரோ. (கசூடு)

கதிர்சுழன்றிடவெண்டிசைக்கட்செவி
யுதிரங்காலவெண்டோல்கருமோட்டவே
பிதிரமாழைப்பிறங்கலுடுவின
முதிரவார்த்தனள்வாய்புகையுற்றிட. (கசூசு)

அடியிற்பார்பிளந்தேயயமல்கவே
முடியினண்டமுகடுநெரிந்திட
நெடியகைகளினுல்வானீறுற
விடிகள்சொல்லிலுடைந்திடவெய்திளள். (கசூள)

அண்டகோளங்கிழிந்திடவார்த்தயில்
கொண்டுவாசவன்கூற்றஞ்சவெய்தவாள்
வண்டுழாயனைமைந்தன்றுதித்திட
வெண்டவத்தர்வியப்பவெரிந்தனள். (கசூழ)

விருத்திராசுரன்மெய்யினேமானவே
யுருத்துருத்திரனஞ்சவங்குற்றிடுங்
கிருத்திநீறுறக்கண்டசுரன்கெடுங்
கருத்திணன்விடம்போற்கனன்ருனரோ. (கசூக)

வீயும்வண்ணம்விடுத்திடும்யாவையும்
மாயஞ்செய்துவயங்கியமைந்தனைத்
தீயுறப்படிதேய்த்தென்கரத்தினி
லேயெனுமுனிற்கொல்வனென்றெய்திணன். (கஎ0)

சுரர்நடுங்கத்துலங்கியவம்பலிற்
கரியிரிந்திடுநற்கமலத்தய
னரனுமஞ்சவடர்ந்திங்கிரணியன்
வரகைகத்துமதலையறைகுவான். (கஎக)

இன்னலில்லெனைக்கொல்லவென்றெந்தையே
யுன்னிரையெனிலுன்னுயிர்தன்னிலு
மன்னியண்டம்வருவித்தமாலடி-
யென்னுள்ளைவகுமுனக்கெளிதாயதோ. (கஎஉ)

மைந்தன்கூறிடமாயனென்றுண்மையாற்
கிந்தியோடினன்றேவர்மன்னெண்கணே
னந்தகாந்தகனென்னடியர்ச்சிப்ப
னொந்தமாமுதனீசொல்லிறையென்றான். (கஎஊ)

எரிசினத்துடனீதறைதந்தையை
மருளகற்றியமைந்தன்வணங்கியே
கருதவும்மரிதாகுங்கடவுடன்
பெருமைகேளெனப்பேசலுற்றானரோ. (கஎசு)

பிரணவந்தனில்வைகும்பெருமையோ
னரணிதன்னிலமர்ந்திடுமங்கிபோல்
மூரணுறுமெணிலண்டங்கள்மொய்த்துளான்
மரணமென்னும்வரம்புகடந்தவன். (கஎரு)

திலமுமுள்ளிற்சிறந்ததயிலமு
மலரும்வாசமும்பாலும்வைகுமெய்யு
மிலகுமாண்பெனவெவ்வுலகங்களு
முலவும்பல்லுயிர்தோறுமுறைகுவான். (கஎசு)

எரியுந்தூமமும்பொன்னுமிழைகளுந்
திரையும்வேலையுஞ்சேர்ந்ததுபோலத்தன்
னுருவிலுருமுரோமத்தெணிலண்ட
மருவச்செய்தனித்தேதன்னுள்வாங்குவான். (கஎன)

மூன்றுகாலமுமூன்றுசுடர்களு
மூன்றுலோகமுமூன்றுகரணமு
மூன்றுசெய்கையுமூன்றுகுணங்களு
மூன்றுதோற்றமுமாகியமூர்த்தியோன். (கஎஅ)

அரிதுமாயெளிதாயிடுமாதியைச்
சுருதிசொல்லிற்றுலங்குமென்னுள்ளம்போற்
கருதுவாயெனிலெங்கணுங்காணலாந்
திரணங்காட்டமுதற்செறிதேவனே. (கஎக)

நெறியையோவினர்முன்னரிநேர்ந்திடான்
மறனீங்கினர்க்கேயெளிதாய்வரு
மறிதிநீயென்றறையவவுணர்கோன்
கறைகொணெஞ்சன்கைகொட்டிநகைத்தனன். (கஅ0)

அண்டமெண்ணிலவன்றனுரோமத்தின்
மண்டுமென்றுமவற்றுறும்வைகுவ
தண்டெனப்பகர்வாய்நிலையோதென
முண்டகத்தயன்போற்றமொழிகுவான். (கஅக)

கொய்யதாகுமணுவினூறெனக்
கொய்துகூறிட்டகோணங்கடோறுளன்
வையம்வானம்வடவரைமீதுளன்
மெய்யுட்டோன்றிவிளங்கியமாமுதல் (கஅஉ)

நிகரிலாதவெண்ணெஞ்சிலுளனிவண்
புகலுஞ்சொல்லினுளன்மணிபூணுள
னிகழ்வினுன்னிதயப்பங்கயமெனு
முகையின்விஞ்சும்பொகுட்டுளமூர்த்தியோன். (கஅங)

ஆதலாலரியெங்கணுமாயுள
னீதிமோதியநீயிவண்காணென
வோதுமைந்தனைநோக்கியுறுகைத்
தேதமாரிதையத்தினியம்புவான். (கஅச)

அழிவிலாதெண்ணிலண்டத்துயிர்தொறு
மொழிவிலாமலுறைபவன்றன்னையிவ்
வெழுவிற்காட்டிலையேலுண்ணிரத்தந்தோல்
முழுதுந்தேக்கிமுடிப்பன்குறையென்றான். (கஅஞ)

இயல்பறுந்தந்தையிவ்வுரைசாற்றலு
மயர்வினெஞ்சனவன்றனைநோக்கியென்
னுயிருணற்கொள்வதற்கரிதென்றுமால்
செயலிதனவன்முன்னிவைசெப்புவான். (கஅசு)

எந்தைதீசொல்லிடந்தொறுமெம்பிரான்
வந்திலானெனிலென்னுயிர்மாய்ப்பன்யா
னுய்ந்துளேனெனினுற்றவனைத்தொழு
மந்தமாலடியானலனென்றனன். (கஅன)

இரணியன்சொல்லிடந்தொறுந்தோன்றநற்
கருணையங்கடலாய்க்கடல்வைகுவோன்
நரணிவானிற்றயங்குமுயிர்தொறுந்
திரணங்காட்டந்தொறுஞ்சினையாயினான். (கஅஅ)

வேறு. மகனிவைசொலவிழியழலுறவாய்நகைவந்திடவோர்கையினு
லுகவிறுதியினிடிபோலொருதறிமிசையுரறெடுமோதுதலுங்
ககனமோடண்டமும்வெடிபடநீள்கணகணுளநடுங்கிடவே
மொகுமொகுமொகுவெனமானரசிங்கமுழங்கமகைத்ததரோ. (கஆக)

நீடியதறியினுளேரகேசரிகின்றுழுழங்கிடலுஞ்
சேடுறுகுமரனுயர்ந்துவியந்துசிறந்தகல்படியின்மிசை
யாடியெழுந்துவிழுந்துமகிழ்ந்துயராரண நூல்களெலாம்
பாடிவயங்கியவெழிலினேவலமுறவந்துபணிந்தனனுல். (க்கூ0)

அரனெடுதிசைமுகன்மாதவர்தேடியுமவர்முனுறுதவரி
வரவருமகிழ்வொடுமதலபணிந்திடவானவர்தாம்வெருவ
விரணியன்முனிவொடுமெழுவினுள்மிகுகைசெய்திடுமெம்பரனை
வெருவியகன்றிடுநீயிவண்மேவினேவெளியுறவருகெனவே. (ககூக)

பரனையினுவணனெடொருகொடியிடுமுனர்பாறியகன்றிடுநீ
வெருவலையமர்பொரவருகெனவேயசுரோசன்விளம்பிடலும்
வரையிவருந்தறியிளவுறவானுயரண்டமும்விண்டிடநீள்
கிரமுறவடிபடிகுழியவளர்ந்திடுசியமெழுந்ததுவே. (ககூஉ)

விண்டிடுதூணினெழுந்தெழிலார்கரமீளிவளர்ந்தசெய
லெண்டவராலுமுணர்ந்தறிதற்கரிதென்றிடில்யாரறிவா
ரண்டமுகட்டின்வயங்கியமர்ந்திடுமாதியிவ்வரியினுளர்
முண்டகவுந்தியின்வந்ததுபோன்றனன்முடிவறைதற்கெளிதோ. (ககஙூ)

சீருறுதாரகையின்னினமாகரசிங்கமெய்யணியிழைக
ளூருவின்வீழ்ந்திடவேயதினுற்றெளிர்ந்தித்திலமொத்தனவா
லோர்கொளுமுந்தியினலர்களினத்திடையெய்துபொதுட்டெனுமா
மேருவயங்கியதென்னில்வளர்ந்திடுபெருமைவிளம்பெளிதோ. (ககூச)

ஆயிரகோடிவெள்ளம்மெனவேபகரவுணரினிருமடியாந்
தூயமுகங்கடொறும்விழிமூன்றுதுலங்கியுகாந்தமுறும்
தீயினையுமிழுவுயிர்ப்பிறுதியினாதேயுசகாவுரனு
மோய்வுறவேயெழுவான்மணின்யாவையும்வாய்கைகடொறுமுளதால். (ககஞ)

எண்ணிலகோடிகரங்களிலங்கிடவெயிறுகள்வாயெனவாய்
கண்ணிடவெரியொடுபுகையுறவிடுகரமஞ்சனகைத்துலகின்
புண்ணியமாகரகேசரிபொறையிலவசுரர்கணிருதரலா
விண்ணவரோடிமறன்மேவியவினவருமுபயருள்செய்தனனுல். (ககசூ)

கரிபரியிரதமோடெண்ணிலவசுரர்கள்கடலெனகிளைபவனா
அரிபடவிரல்களினுகிரினுறத்திடவண்டமுகட்டளவாய்
வினாவினினுயர்வனாபோலவெழுந்துவிழுந்துமடித்திடநீ
டனாயினினிறைகறையோடினவலியுறுசாகரமாமெனவே. (ககஎ)

அகலியவடிவிரணுனிகளினீடறிடவயமுறமினிரதம்
புகரிபவினமொடுபொடலமெண்ணிலபொறையிலவசுரர்திர
ணிகரிலவனாயெனுதிருதர்கள்கடிகியவிசையொடுசுழலுமவர்
மிகமுனியரிவிழிபெழுமழல்வளவுறவெந்துகரிந்தனராஸ். (ககஅ)

வேறு. அசுரனைப்படிமிசையனைத்திடுமழலுறக்குதியாற்
பிசையுமத்திகளுடலினிற்றிகழ்பிதிர்வுறப்பொடியாய்
நிசிசரக்குழுமடியவுக்கிரவுகிருறுத்திடீ
டசைமலைக்குவையுறநடித்தனதலையிலுறுகுறையே. (ககக

வட்வனைக்குவடிடையடித்திடுமதகரிக்குழுவை
யுடல்படிக்கணிணுறவுனிக்கிருமுரினிற்பரிடைக்
கடையழுற்றிடுகரவிரற்கொடுதுணிசெய்கத்திரிபோ
லடல்மிகுத்திடும்சுரனைச்சிரமறவதைத்திடுமே. (உ00)

வகிர்படித்துடலறவுரித்திடும்வனையையொத்தவனைக்
ககனமுற்றிடவிடுமுயிர்ப்பினிற்கரிபரித்திரளை
யுகிரிடத்தவணெளிசெயுக்கிரமுறுமறத்திரளை
நிகரின்மற்றெருருகதுனிக்கணினிறையவைத்திடுமால். (உ0க)

சிலர்களைப்பெருமலையினுற்றுடல்சிதறமொத்திடுமால்
சிலர்களைக்கடிதுயிரறக்கடறினாயினுய்த்திடுமால்
சிலர்களைக்கொடுவடவையிற்சிரமெரியவைத்திடுமால்
சிலர்களைத்திரிவனாயிறக்கடுசினமொடொத்திடுமால். (உ0உ)

நாசியுற்றெழுவாதமெற்றிடாகமுற்றிடுவார்
வாசியுற்றவர்தேரினுற்றவர்மாருதத்திறலோ
ரோசைபெற்றுயர்வானமுற்றுவிலோசனத்துறுதீ
வீசவக்கணரீறுபட்டனர்வீரமற்றிடவே. (உ0ங)

உகிரினிற்கரிபரியினுற்றவரொருகணத்திருவ
வகிருமெத்தியகுடர்களைக்கொய்தமகிழுமத்தசையை
நுகருமிக்கிடுகுருதியைக்கொடிதொடியினிற்பருகிக்
ககனமுட்கிடமிகநகைத்திடுமனல்கடிக்குறவே. (உ0ச)

அலகைசுற்றிடவிகலனுற்றிடவவுணரத்திபரி
யிலகுநற்கிரிநிகரொயிற்றிடையமரவிட்டுழல
வுலகமெத்தியவுதரவக்கினிதனிலுலர்த்துசரு
கிலையெனக்கடிதெரியவிட்டனவெவையுமிக்கணமே. (உ0ஞ)

கரியினைப்படிமிசையடித்தனகவிணுடைக்கரமே
பரியினைக்கொடுவடவையிட்டனபலதிருக்கரமே
நிருதரைக்கடறினாயினிட்டனநிகரிலக்கரமே
